தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

பாலசமுத்திரம் பகுதியில் விவசாயிகளுக்கு திருந்தியநெல் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.

பழனி அருகே பாலசமுத்திரம் எஸ்டேட் பங்களாவில் நீர்வளத் திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் தொழில்நுட்ப உரை வழங்கினார். பழனி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் கணேசன், துணை வேளாண்மை அலுவலர் துரைச்சாமி உதவி வேளாண்மை அலுவலர் ராஜாசேட், முரளிதரன், காளியப்பன், செல்லச்சாமி, சசிகுமார் ஆகியோர் செய்திருந்தனர். பயிற்யின்போது விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகளை தரக்கட்டுப்பாடு அதிகாரிகள் வழங்கினர். தொடர்ந்து அட்மா திட்டத்தின் கீழ் கம்பு, ராகி போன்ற சிறுதானியங்கள் செயல்விளக்கத் திடல்களை கணக்கன்பட்டி, அமரபூண்டி பகுதிகளில் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர் செல்வராஜ் ஆய்வு செய்தார்.

### ஜன. 24, 25-ல்கால்நடை மருத்துவ பரிசோதனை முகாம்

நாகை மாவட்டத்தில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் கால்நடை மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தி திறன், இனப் பெருக்கம்

ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கச் செய்தல், குடற்புழு நீக்குதல் உள்ளிட்டவைகளுக்காக நாகை மாவட்டத்தில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் கால்நடைகளுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

அரசின் விலையில்லா கால்நடைகள் பெற்ற விவசாயிகளும், திட்டம் சாராத கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரும் தங்கள் கால்நடைகளை இந்த முகாமுக்கு கொண்டு வந்து பயன் பெறுமாறு ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கோடை பருவத்தில் பயறு வகை சாகுபடி:விவசாயிகளுக்கு மானியத் திட்டங்கள்**

நாகை மாவட்டத்தில் நிகழ் கோடை பருவத்தில் பயறு வகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) ரவீந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் நிகழ் கோடைப் பருவத்தில் 1.07 லட்சம் ஹெக்டேர் பரப்பில் உணவு தானிய உற்பத்தி இயக்கத்தில் பயறு வகைகள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென தனி திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஏக்கருக்கு 400 கிலோ மகசூல் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இதையொட்டி, தமிழக வேளாண் துறையால் இம்மாவட்டத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் - பயறு, பயறு வகை உற்பத்திக்கான அதிவிரைவுத் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் - கூடுதல் பரப்பு அதிகரித்தல், கோடை பருவத்தில் உணவு தானிய உற்பத்தி பயறு வகை பயிர்கள் சாகுபடி (சிறப்பு தொகுப்புத் திட்டம்) ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களின் கீழ் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், விதை நேர்த்தி மருந்துகள், டி.ஏ.பி ரசாயன உரம், தண்ணீர் கொண்டு செல்லும் பைப்புகள், மழைநீர் தூவுவான் ஆகியன வழங்கப்படவுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் உளுந்து மற்றும் பயறு வகை தானியங்களை தனியார் நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்யவும் இத்திட்டத்தின் கீழ் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, மானியத் திட்டங்களை விவசாயிகள்  பயன்படுத்திக் கொண்டு பயறு வகை சாகுபடியை அதிகளவில் மேற்கொண்டு, அதிக மகசூல் பெற முனைப்புக் காட்ட வேண்டும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால் விவசாயிகள் அவதி

காரைக்காலில் சம்பா நெல் அறுவடைப் பணி தொடங்கிவிட்ட நிலையில், அரசு சார்பில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால் விவசாயிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இங்கு சம்பா, தாளடி ஏறக்குறைய 5 ஆயிரம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆழ்குழாய் பாசனத்தில் விதைக்கப்பட்ட வயல்களில் பொங்கல் பண்டிகைக்கு முன்னரே அறுவடைப் பணி தொடங்கிவிட்டது. காவிரித் தண்ணீரை நம்பி விதைக்கப்பட்ட வயல்களில் தற்போது அறுவடை தொடங்கியுள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் திருநள்ளாறு, அம்பகரத்தூர், நெடுங்காடு, பிள்ளைத்தெருவாசல், பொன்பேத்தி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

காவிரிநீர் பற்றாக்குறை, தரமான விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்கள் போதிய அளவு மானியத்தில் கிடைக்காமை, பருவமழை உள்ளிட்ட பிரச்னைகளில் தப்பித்து தற்போது அறுவடை தொடங்கியுள்ளது. இந்த நிலையில், அரசு செய்யவேண்டிய முக்கியமான பணி, நெல் கொள்முதல் நிலையங்களை திறப்பது மட்டுமே என்கின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து பொன்பேத்தி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை கூறியது:

நெல்லை நியாயமான விலைக்கு விற்க முடியாத நிலையில் உள்ளோம். மத்திய உணவுக் கழகம், மார்க்கெட்டிங் சொசைட்டி உள்ளிட்டவை நேரடி நெல் கொள்முதல் செய்ய முன்வந்தால் மட்டுமே, விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும். ஆனால், காரைக்காலில் எந்தவொரு அரசு நிறுவனமும் நெல் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. புதுச்சேரி அரசு ஓரிரு நாட்களில் நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். காரைக்கால் மார்கெட்டிங் சொசைட்டி முன்னாள் தலைவர் ஆசைத்தம்பி கூறியது:

மார்கெட்டிங் சொசைட்டி மூலம் நெல் கொள்முதல் செய்ய புதுவை பட்ஜெட்டில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், நிதி ஒதுக்கவில்லை. நிதியின்மையால் நிகழாண்டு கொள்முதல் நடைபெறுமா என்பது சந்தேகமே. மத்திய உணவுக் கழகம் நெல் கொள்முதல் செய்ய, புதுச்சேரி அரசு ஏற்கெனவே எடுத்த சில கொள்கை முடிவை மாற்றவேண்டுமென கூறுகிறது. முடிவுகள் உரிய காலத்தில் எடுக்கப்படாததால், விவசாயிகள் நெல்லை தனியாரிடம் குறைந்த விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

### நெற் பயிரில் குலைநோய் தாக்குதல்: அதிகாரிகள் ஆய்வு

குமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் பகுதியில் நெற் பயிரில்  ஏற்பட்டுள்ள குலைநோய் தாக்குதலை ஆரம்பநிலையில் கட்டுப்படுத்த பூஞ்சாணக் கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும் என வேளாண் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ராஜாக்கமங்கலம் வட்டாரத்தில் பெருஞ்செல்வவிளை ஏலாவில் சுமார் 80 ஹெக்டேர் பரப்பில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பொன்மணி மற்றும் டி.பி.எஸ்-3 நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

நெற்பயிரை ஆய்வு செய்ய வேளாண்துறை அதிகாரிகள் மற்றும் பேச்சிப்பாறை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் அடங்கிய குழு பெருஞ்செல்வவிளை ஏலாவில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது வயல்களில் குலைநோய் தாக்குதல் ஆரம்ப நிலையில் இருப்பது தெரிய வந்தது. அவற்றைக் கட்டுப்படுத்த பூஞ்சாணக்கொல்லி மருந்தான ஹினோசான் 2 மி.லி. தெளித்திட விஞ்ஞானிகளால் பரிந்துரை

செய்யப்பட்டது. இந்த ஆய்வில் குமரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ்.நாகமணி பிள்ளை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம்.ஆர். வாணி, வேளாண் கல்லூரி விஞ்ஞானிகள் கமலக்கண்ணன், இருளாண்டி, முன்னோடி விவசாயிகள் மீனாட்சி சுந்தரம், சிறுமணி, பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மழையின்றி கருகும் மானாவாரி பயிர்கள்

தூத்துக்குடி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், மழையை நம்பி பயிரிடப்பட்ட மானாவாரி பயிர்கள் கருகிய நிலையில் காணப்படுகின்றன. இதனால், வறட்சி மாவட்டமாக அறிவித்து தங்களுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏறத்தாழ 46 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பாசனப் பகுதிகள் உள்ளன. தாமிரவருணி ஆற்றின் நீரை நம்பியுள்ள இவர்களுக்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை என்று நீண்ட நாள்களாகவே குற்றச்சாட்டு உள்ளது.

இதேபோல, மழையை மட்டுமே நம்பி பாசனம் செய்யும் மானாவாரி விவசாயிகளும் தங்களுக்கு இந்த ஆண்டு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம், எட்டையபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம், வல்லநாடு உள்ளிட்ட பகுதிகளில் ஏறத்தாழ 3 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி பயிர்களான பாசிப்பயறு, உளுந்து மற்றும் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் எப்படியும் மழை பெய்துவிடும் என்ற நம்பிக்கையில் புழுதியில் 60 நாள் பயிரான பாசி, உளுந்து, மக்காச்சோளம் ஆகியவற்றை விதைத்தனர்.

விவசாயிகள் எதிர்பார்த்தபடி இல்லாமல் குறைவான அளவே மழை பெய்ததால் பயிர்கள் அரைகுறையாக மட்டுமே வளர்ந்துள்ளன. தொடர்ந்து பரவலாக மழை

பெய்யாததால் வழக்கமாக ஒன்று முதல் ஒன்றரை அடி உயரம் வரை வளரக்கூடிய பாசி மற்றும் உளுந்து செடிகள் வெறும் அரையடி உயரம் மட்டுமே வளர்ந்துள்ளன.

இதிலும் பாதி பயிர்கள் முற்றிலும் வளர்ச்சியே இல்லாமல் போய்விட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர். எப்படியும் மழைபெய்து விடும் என்ற எதிர்பார்ப்பில் பயிருக்கு களையெடுத்து, இருமுறை மருந்தடித்து தற்போது மகசூலை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர்.

ஆனால், பருவமழை ஏமாற்றியதால் உளுந்து, பாசி செடிகள் கருகி விட்டன. மக்காச்சோளம் பூ விட்ட நிலையிலும், அரைகுறையாக விளைந்த நிலையிலும் வாடி வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க தூத்துக்குடி மாவட்டச் செயலர் கே.பி. பெருமாள் கூறுகையில், வழக்கமாக ஏக்கர் ஒன்றுக்கு 400 கிலோ உளுந்து மற்றும் பாசி மகசூல் கிடைக்க வேண்டும். ஆனால் தற்போது போதிய மழை பெய்யாததால் மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டு, சிலருக்கு ஏக்கருக்கு வெறும் 25 கிலோ மட்டுமே மகசூல் கிடைத்துள்ளன. மற்றவர்களுக்கு அதுவும் கிடைக்கவில்லை.

தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்ந்து வரும் சுமார் 4 லட்சம் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் வழங்கப்பட்டது.

அதேபோல், தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை (ஜன. 20) ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம் என்றார்.

இதுதொடர்பாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் கூறுகையில், தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

## மூட்டை நெல் கூடுதல் எடையில் கொள்முதல்

கடலூர் மாவட்டம் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் தனியார் வியாபாரிகள், விவசாயிகளிடம் மூட்டை நெல் கூடுதல் எடையில் கொள்முதல் செய்வதாக புகார் எழுந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. காவிரி டெல்டா கடை மடைப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில், தற்போது சம்பா நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. அரசு நிர்ணய விலையில், இந்த ஆண்டு 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை நெல்லுக்கு ரூ.840 மட்டுமே கிடைக்கும். எனவே, இதனை தனியார் நெல் வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு விவசாயிகளிடம் கூடுதல் எடை வைத்து ரூ.900-க்கு கொள்முதல் செய்வதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தெரிவித்தது: சாக்கு டன் 61 கிலோ எடை மூட்டை நெல்தான் விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால் 61 கிலோவுக்கு பதிலாக விவசாயிகளுக்கு தெரியாமல் 65 கிலோ வரை எடை வைத்து வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே முத்திரை ஆய்வாளர்கள் தனியார் வியாபாரிகளின் தராசுகளை ஆய்வு செய்ய வேண்டும். கொள்முதல் செய்யும் நெல் மூடைகளை, வரி செலுத்தாமல் வெளியில் எடுத்துச் செல்வதால் அரசுக்கும் இழப்பு ஏற்படுகிறது.

ஒரு லாரிக்கு 100 மூட்டைக்கு மட்டும் செஸ் வரி செலுத்துகிறார்கள். மீதமுள்ள மூட்டைகளை வரி செலுத்தாமல் எடுத்துச் செல்கிறார்கள்.

எனவே தனியார் வியாபாரிகள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தனியார் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு கடந்த ஆண்டை விட கூடுதலாக வாடகை வசூலிப்பதாலும், இயந்திரங்கள் பற்றாக்குறையாலும் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

எனவே இவ்விரு தாலுகாக்களிலும் உள்ள விவசாயிகள் நலன் கருதி, வெளி மாவட்டங்களில் உள்ள அரசு நெல் அறுவடை இயந்திரங்களை கடலூர் மாவட்ட நிர்வாகம் வரவழைத்து வழங்கி உதவ வேண்டும் என்றார் பி.விநாயகமூர்த்தி.

## பால்கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால் சட்டப்பேரவையை முற்றுகையிடும் போராட்டம்

புதுச்சேரியில் பால்கொள்முதல் விலையை உயர்த்த மாநில அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் கால்நடைகளுடன் சட்டப்பேரவையை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என புதுச்சேரி மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதன் தலைவர் ஏம்பலம் ஆர்.செல்வம் வெளியிட்ட அறிக்கை:

புதுவை பான்லே கூட்டுறவு நிறுவனம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பெறப்படும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.19 மட்டுமே வழங்கி வருகிறது. அண்டை மாநிலங்களில் கொள்முதல்விலை உயர்த்தப்பட்டபோதும், புதுவையில் கொள்முதல் விலை உயரவில்லை. தற்போது உள்ளூர் உற்பத்தியாளர்கள் மூலம் பான்லே வுக்கு நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால் அந்நிறுவனம் நாள்தோறும் 1 லட்சம் லிட்டரை விற்கிறது. மீதமுள்ள பாலை அண்டை மாநிலங்களில் உள்ள தனியார் பால் பண்ணை உரிமையாளர்களிடம் இருந்து ரூ.29 தந்து பெறுகின்றனர்.

தமிழகம், கேரளம், கர்நாடக மாநில அரசுகள், ரூ.24 மட்டுமே வழங்கும் நிலையில் புதுவை அரசு ரூ.29 வழங்க வேண்டியது ஏன். விற்பனை விலையை விட கொள்முதல் விலை அதிகம் தருவது ஏன்?. இதில் யாருக்கு பங்கு தரப்படுகிறது என்பதை அறிய துணைநிலை ஆளுநர், முதல்வர் உத்தரவிடவேண்டும்.

வெளிமாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு முறையான டெண்டர் கோரப்படவில்லை. முறையான டெண்டர் வைத்தால் ரூ.23-க்கு தரமான பாலை வழங்க பல்வேறு நிறுவனங்கள் தயாராக உள்ளன.

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மூலம் ரூ.23-க்கு வெளிச்சந்தையில் இருந்து பெற்றுத் தர தயாராக உள்ளோம். நஷ்டத்தில் இயங்கும் பான்லே நிறுவனத்தில் கூடுதல் உழியர்களை நியமித்து வருவது கடும் சிக்கலை ஏற்படுத்தும். பான்லேவின் பாரபட்சத்தால் புதுவையில் நாள் ஒன்றுக்கு 1 லட்சம்

லிட்டராக இருந்த பால் உற்பத்தி 25 ஆயிரமாக குறைந்துவிட்டது. உள்ளூரில் பால் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் அமைப்புக்கு பால்கொள்முதல்விலையை உயர்த்தித் தர வேண்டும். இல்லையென்றால் சட்டப்பேரவை முன்பு கால்நடைகலோடு முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்றார் செல்வம்.

## விவசாய துறையில் பல்வேறு படிப்புகள்



இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் ICAR-ன் கீழ் செயல்படும் விவசாய பல்கலைக்கழக கல்லூரிகளில் இளநிலை முதுநிலை ஆராய்ச்சி படிப்புகளில் சேர தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. AIEEA தகுதித்தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

கல்வித்தகுதி: +2வில் கணிதம்/அயிவியல்/விவசாயம்/தோட்டக்கலை பாடப்பிரிவுகளில் 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுடம். எஸ்சி, எஸ்டி மற்றும் சிறப்பு பிரிவினர் 40சதவீத மதிப்பெண்களுடன் +2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது: 17 முதல் 23 வயத்திற்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை www.icar.org.in என்ற இணையதளத்தின் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பிப்ரவரி 7ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கூடுதல் விவரல் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம்



நாளுக்கு நாள் தண்ணீர் தேவை அதிகரித்து வரும் சூழலில் சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்யும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து அதிக மகசூல் பெறலாம். தோட்டக்கலைத் துறை அளிக்கும் 100 சதவீத மானியத்தைப் பெற்று சிறு, குறு விவசாயிகள் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

100 சதவீதம் மானியம்: அபரிமிதமாக நீரைப் பயன்படுத்துவதை விட, அளவாக நீரைப் பயன்படுத்துவதால் நிறைவான மகசூல் பெற முடியும் என்பது அறிவியல்பூர்வமாகவும், அனுபவரீதியாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீர் சிக்கனம் நிறைவான மகசூலுக்கு வழிவகுக்கும். சொட்டுநீர்ப் பாசன முறையை ஊக்குவிக்கும் வகையில் அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியம் வழங்குகிறது.

ஒரு ஏக்கருக்கு ரூ.43,816-க்கு மிகாமல் நன்செய் நிலமாக இருந்தால் இரண்டரை ஏக்கர் வரைக்கும், புன்செய் நிலமாக இருதால் 5 ஏக்கர் வரைக்கும் எந்தப் பயிராக இருந்தாலும், என்ன இடைவெளியாக இருந்தாலும் விருப்பம் இருப்பின், அவருக்கு சொந்தமான பரப்பு முழுமைக்கும் சொட்டுநீர்ப் பாசனத்தை சிறு விவசாயி அமைத்துக் கொள்ளலாம்.

குறு விவசாயி நன்செய் நிலமாக இருந்தால் ஒன்றேகால் ஏக்கர், புன்செய் நிலமாக இருப்பின் இரண்டரை ஏக்கர் வரைக்கும் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கலாம். சிறு, குறு விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலம் முழுவதையும் 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பயன்கள்: சொட்டுநீர்ப் பாசன முறையால் நீரும் சத்துக்களும் வேரினில் கிடைக்கும்; நீரைச் சிக்கனப்படுத்தலாம்; பாசனத்துக்கு தனியாக ஆள் விடத் தேவையில்லை. இதனால் பாசன ஆள்கள் செலவு முற்றிலும் குறைகிறது.

சத்துக்கள் நேரடியாக வேருக்கு கிடைப்பதால், அவை வீணாகாமல் பயிருக்கு கிடைக்கின்றன. தழைச்சத்தை நேரடியாக மண்ணில் இடும்பொழுது இடுஉரத்தில் 30 முதல் 50 சதவீதம்தான் கிடைக்கிறது. அதையே உரப்பாசனமாக இட்டால் சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலம் 95 சதவீத தழைச்சத்து பயிருக்கு கிடைக்கிறது. அதேபோல் மண்ணில் நேரடியாக இடும்பொழுது 50 சதவீதம் மட்டும் கிடைக்கும் சாம்பல்சத்து சொட்டுநீர்ப் பாசனம் மூலம் 80 சதவீதம் கிடைக்கிறது.

குறைந்த செலவினம்: நீர் வேரை நேரடியாகச் சென்றடைவதால் களைகள் முளைப்பது குறைகிறது. களை எடுக்கும் செலவினம் பெருமளவு குறைகிறது. குறிப்பாக, களையெடுத்து மீள முடியாத வாழை சாகுபடியில் இது ஒரு வரப்பிரசாதம். களைகளின் போட்டியின்றிப் பயிர் வளர்வதால் 30 முதல் 60 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்கிறது.

முன்னதாக முதிர்ச்சிக்கு வருவதால் முன்கூட்டியே கையில் காசு பார்க்கமுடியும். அடுத்த பயிர் சாகுபடியை முன்னதாகவே மேற்கொள்ளலாம். விளைபொருளின் தரமும் எடையும் பொலிவும் அதிகரிப்பதால் நல்ல விலை கிடைக்கிறது.

யார் மானியம் பெறலாம்? வருவாய்த் துறை நிலவகைப்பாட்டின்படி நன்செய் நிலம் என்றால் இரண்டரை ஏக்கருக்குள்ளும், புன்செய் நிலமாக இருந்தால் 5 ஏக்கருக்குள்ளும் சொந்த நிலம் இருப்பவர்கள் இந்த மானியம் பெறத் தகுதியானவர்கள். சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு நீர்

இறைக்கும் மோட்டாருடன் கூடிய கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு போதிய நீர்ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.

பொதுவான நீர்ஆதாரம் கொண்ட சின்னஞ்சிறு விவசாயிகள் 2, 3 பேர் சேர்ந்தும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

தேவையான ஆவணங்கள்: பயனாளி சிறு, குறு விவசாயிகளுக்கு உரிய சான்றிதழை வருவாய் வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். நிலத்தின் கணினிப் பட்டா, சாகுபடி செய்துள்ள அல்லது செய்யவிருக்கும் பயிர் பரப்பை சர்வே எண்கள் வாரியாக குறிப்பிட்டு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல், வயல் வரைபட நகல், இருப்பிட முகவரியைத் தெளிவாகக் குறிக்கும் ரேஷன் அட்டை நகல் அல்லது வாக்காளர் அடையாள அட்டை நகல், பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படங்கள் 2 ஆகியவற்றுடன் பயனாளிகள் விண்ணப்பிக்க வேண்டும்.

தொடர்புக்கு: வாழை, காய்கனிகள், மிளகாய், மலர்ப் பயிர்கள், பழமரப் பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்து சிறு, குறு விவசாயிகள் நீர்ச் சிக்கனம், நிறைவான மகசூலுக்கு ஒரே நேரத்தில் வழிவகுக்கும் சொட்டுநீர்ப் பாசனத்தை மானியத்தில் அமைத்து பயன்பெற சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இயங்கும் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என்றார் அவர்.

## பருத்தி செடிகள் வாடிக் காய்வதை தடுக்கும் முறைகள்



பருத்தி செடிகள் தண்டு கூன் வண்டின் தாக்குதல் காரணமாக மகசூல் பாதிக்கும் பருவத்தில் உள்ளது. இதனை கட்டுபடுத்தும் முறையை பின்பற்றி அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் குறிப்பாக கோவில்பட்டி வட்டாரப் பகுதியில் பருத்தி சாகுபடி மானாவாரிப் பயிராகவும், இறவைப் பயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பூக்கும் பருவத்தில் உள்ள செடிகள் திடீரென வாடிக் காய்ந்துவிடுகின்றன. இதனால் செடிகளின் எண்ணிக்கை குறைந்து மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பருத்தியைத் தாக்கும் தண்டு கூன்வண்டு ஆகும்.

சேத அறிகுறிகள்: தண்டு கூன் வண்டின் தாக்குதலானது விதை முளைத்த 12 முதல் 15 நாள்களிலேயே தொடங்கிவிடுகிறது. புழுக்கள் தண்டினை வட்ட வடிவத்தில்

துளைத்து உள்ளே உள்ள மெல்லிய திசுக்களை உண்கின்றன. இதனால் தண்டுகளில் வீக்கம் ஏற்படுகிறது. ஒரே செடியில் பல இடங்களில் வீக்கம் காணப்படும். மெல்லிய காற்று வீசினால்கூட இந்த வீக்கம் உள்ள பகுதியானது அடித்து செடிகள் இறந்துவிடும். மேலும் தாக்கப்பட்ட செடிகளில் காய்களில் எண்ணிக்கை மற்றும் தரம் குறைகிறது.

வாழ்க்கைப் பருவம்: கூன் வண்டானது செடியின் பட்டையை உட்கொண்டு, தரைக்கு ஒட்டிய இடத்தில், தண்டில் முட்டைகளை இடுகிறது. முட்டையில் இருந்து வெளியே வரும் புழுவானது 50 முதல் 60 நாள்களில் முழு வளர்ச்சியை அடைந்து தண்டிற்குள் உள்ளேயே கூட்டுப்புழுவாக மாறிவிடுகிறது. கூட்டுப்புழுவில் இருந்து வெளியே வரும் வண்டானது அழுக்கு கலந்த பழுப்பு நிறத்துடன் இருக்கும்.

மேலாண்மை முறைகள்: வண்டின் தாக்குதலால் காய்ந்துபோன செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும். தாக்குதலுக்கு உள்ளான செடிகளை அறுவடைக்குப் பின் எரித்துவிடவேண்டும். தண்டில் தரையை ஒட்டிய இடத்தில்

முட்டை இடுவதைத் தவிர்க்க மண் அணைக்க வேண்டும். மண் அணைப்பதற்கு முன்னால் ஒரு ஏக்கருக்கு கார்போயியூரான் 3ஜி 12.5 கிலோ என்ற அளவில், விதைத்த 20-ஆவது நாள் இட வேண்டும்.

குளோர்பைரியாஸ் 20இசி 2.5 மில்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, விதைத்த 15 மற்றும் 30-ஆவது நாளில் தண்டுபாகம் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். அடுத்த பருவத்தில் வயலில் தொடர்ச்சியாக பருத்தி பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட விதையளவை விட அதிகமாக விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தொழு உரம் 10 டன் மற்றும் வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ இட வேண்டும் என தெரிவித்துள்ளார் அவர்.

### பவானிசாகர் அணைம்நீர்மட்டம் 46.05 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 46.05 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 348 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 348 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 3.29 டி.எம்.சி.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 70 கன அடியாகக் குறைந்தது

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 70 கன அடியாக ஞாயிற்றுக்கிழமை குறைந்தது. காவிரி ஆற்றின்  நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வந்தது.

நீர்வரத்து இல்லாத நிலையில், அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதனால், அணையின் நீர்மட்டமும் மளமளவெனச் சரிந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை மேட்டூர் அணைக்கு  நீர்வரத்து நொடிக்கு 70 கன அடியாகக் குறைந்தது. அணையின் நீர்மட்டம் 53.23 அடியாகவும், நீர் இருப்பு 19.90 டி.எம்.சி.யாகவும் இருந்தது. அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து சரிந்து வருவதால், காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### ஜன. 21-ல் வம்பனில் வாழையில் துல்லிய பண்ணையப் பயிற்சி

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வாழையில் துல்லிய பண்ணையம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த இலவசப் பயிற்சி ஜன. 21-ம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2639 ஹெக்டேர் பரப்பளவில் திருவரங்குளம், கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி, புதுக்கோட்டை ஆகிய வட்டங்களில் வாழை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதில் அதிக லாபம் பெற தற்போதுள்ள நீர் பற்றாக்குறை, இடுபொருட்கள் விலை ஏற்றம், ஆட்கள் பற்றாக்குறை போன்ற பிரச்னைகளை எளிதில் கையாண்டு அதிக லாபம் பெற துல்லிய பண்ணையத் தொழில்நுட்பங்கள் மட்டுமே சிறந்த தீர்வாகும். எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் வருகிற 21-ம் தேதி நடைபெறும் இந்தப் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறலாம். மேலும், விவரங்களுக்கு 96774 85513 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

### தஞ்சாவூரில் விவசாயிகள் நடைபயணம் - ஆர்ப்பாட்டம்

டெல்டா பகுதியில் மீத்தேன் வாயு எடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி நடைபயணம் மேற்கொள்ளும் தமிழக விவசாயிகள் சங்கத்தினர், டெல்டா புலிகள் இயக்கத்தினர் தஞ்சாவூரில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டெல்டா பகுதியில் மீத்தேன் வாயு எடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும், மீத்தேன் வாயு எடுப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் தமிழக விவசாயிகள் சங்கத்தினர், டெல்டா புலிகள் இயக்கத்தினர் பட்டுக்கோட்டையில் சனிக்கிழமை நடைபயணத்தைத் தொடங்கினர். அங்கு ஆர்ப்பாட்டம் நடத்திய இவர்கள் பின்னர் நடைபயணம் மேற்கொண்டு ஒரத்தநாடுக்குச் சென்றனர்.

தஞ்சாவூருக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை வந்த இவர்கள் ரயிலடியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கக்கரை ஆர். சுகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் டெல்டா புலிகள் இயக்கம் ஒருங்கிணைப்பாளர் கணேசமூர்த்தி, மாவட்டச் செயலர் சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேபோல, திங்கள்கிழமை பாபநாசம், ஜன. 21-ம் தேதி கும்பகோணம், 22-ம் தேதி திருவாரூர், 23-ம் தேதி நீடாமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு நடைபயணமாகச் செல்லும் இவர்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டமும் நடத்தவுள்ளனர். மன்னார்குடியில் ஜன. 25-ம் தேதி நடைபெறவுள்ள மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்துக்கு எதிராக பேரழிப்புக்கு எதிரான பேரியக்கம் நடத்தவுள்ள பேரணியில் பங்கேற்கவுள்ளனர்.

### நெல் கொள்முதலில் குறைகளைக் களைய வலியுறுத்தி பிப். 25 முதல் வேலைநிறுத்தம்

நெல் கொள்முதலில் உள்ள குறைகளைக் களைய வலியுறுத்தி பிப். 25-ம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்வது என ஏஐடியூசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் சி. சந்திரகுமார் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது:

நெல் கொள்முதலில் நடைபெறும் குறைபாடுகளுக்கு நிர்வாகச் செயல்பாடுகளும், அலுவலர்களின் அணுகுமுறையும்தான் அடிப்படை காரணங்கள். இதைத் தொடர்ந்து கொள்முதல் பணியாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களின் செயல்பாடுகளும் அமைந்துவிடுகின்றன. எனவே, முதல்கட்டமாக நிர்வாகச் செயல்பாடுகளிலும், அடுத்தகட்டமாகக் கொள்முதல் நிலைய மட்டத்திலான செயல்பாடுகளிலும் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து நெல் இயக்கம் செய்வதற்கு லாரி ஓட்டுநருக்குக் கொள்முதல் பணியாளர்கள் கூடுதலாக தொகை கொடுத்தால்தான் நெல் ஏற்றி அனுப்ப இயலும் என்ற நிலை உள்ளது. இதைத் தடுப்பதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக மண்டல அளவிலான அலுவலர்கள் இதற்கு

ஆதரவாகச் செயல்படுவது வருத்தமளிக்கிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

பெரும்பாலான கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் அலுவலர் முதல் மண்டல அளவிலான அலுவலர்கள் பெரும்பாலானோர் கொள்முதல் பணியாளர்களைத் தவறாகப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் சுயநல நோக்குடன் செயல்பட்டு வருகின்றனர். இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்து அனுப்பும்போது எடை குறைவு ஏற்படும் என்பது அறிவியல் ரீதியான உண்மை. ஒரு கிலோ எடை குறைந்தாலும், அதைக் கொள்முதல் பணியாளர்கள்தான் செலுத்த வேண்டும் என நியாயமற்ற முறையில் கட்டாயமாக நிர்வாகத்தால் இழப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது. இதுவே ஊழலுக்கு வழிவகுக்கிறது. இதைக் கட்டாயமாகக் கைவிட வேண்டும். நெல் கொள்முதல் நிலைய சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு எடை கூலியாக மூட்டைக்கு ரூ. 1.16 மட்டுமே வழங்கப்படுகிறது. தனியாருக்கு இணையாக எடை கூலி மூட்டைக்கு ரூ. 10 என வழங்க வேண்டும். ரயில் தலைப்பில் ஒப்பந்த முறையில் ஏற்றுக் கூலியாக டன்னுக்கு ரூ. 62 என நிர்வாகம் வழங்குகிறது. இதேபோல மற்ற மையங்களில் டன்னுக்கு ரூ. 17.95 என உள்ளதை ரூ. 62 ஆக உயர்த்த வேண்டும். மற்ற அனைத்து கூலி விகிதங்களும் இரு மடங்காக உயர்த்தி வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி கழகத்தின் சென்னை தலைமை அலுவலகம் முன் ஜன. 28-ம் தேதி வாயில் கூட்டம், தஞ்சாவூரில் பிப். 11-ம் தேதியும், திருவாரூரில் பிப். 14-ம் தேதியும், நாகையில் பிப். 18-ம் தேதியும் மண்டல அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டமும், பிப். 25-ம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டமும் மேற்கொள்வது எனத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகச் சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்கத்தின் கூட்டுப் பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றார் சந்திரகுமார்.

## கால்நடை பண்ணை சார்ந்த அஞ்சல் வழிக்கல்வி:சென்னையில் ஜன.30-ல் இலவச பயிலரங்கு

கால்நடை பண்ணை சார்ந்த அஞ்சல் வழிக் கல்வியை பெற விரும்பும் விவசாயிகளுக்காக சென்னையில் ஜன.30-ம் தேதி இலவச பயிலரங்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்தின் ஈரோடு கிளை தலைவர் ஆர்.யசோதை வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, இறைச்சி கோழி வளர்ப்பு, முட்டைக்கோழி வள ர்ப்பு, ஜப்பானிய காடை வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கால்நடைகளுக்கான பசுந்தீவன உற்பத்தி உள்ளிட்டவற்றில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு அறிவியல் தொழில்நுட்பம் வழங்கி, இத்தொழிலை லாபகரமாக மாற்றும் வகையில் தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் அஞ்சல் வழியில் கல்வியை நடத்தி வருகிறது. இதுகுறித்த இலவச பயிலரங்கு சென்னை மாதவரம் பால் பண்ணையில் உள்ள தமிழ்நாடு அறிவியல் பல்கலைக்கழக தலைமை அலுவலகத்தில் ஜன.30-ம் தேதி நடைபெறுகிறது. இந்தப் பயிலரங்கில் தங்களது பெயர்களை பதிவு செய்வோர், வேளாண் தொழில் குறித்து அஞ்சல் வழியில் கல்வி பயில முடியும். இப்பயிற்சி பெறுவோர் குறைந்தபட்சம் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 3 மாதம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## விவசாயம் செழிக்கக் காரணமான காலிங்கராயனுக்கு மரியாதை

பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டியதோடு, வாய்க்கால் வெட்டி பாசனப் பரப்பை அதிகரித்த காலிங்கராயனுக்கு பவானி அணைக்கட்டில் சனிக்கிழமை மாலை அணிவித்து மரியாதை தெரிவிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசனமாக காலிங்கராயன் வாய்க்கால் உள்ளது. தொடர்ந்து 12 ஆண்டுகள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்து வாய்க்காலும், அணையும் கட்டப்பட்டது. பாண்டிய அரசினிடம் தளபதியாக பணியாற்றிய காலிங்கராயன், இந்த அணையைக் கட்டி பொதுமக்கள், விவசாயிகளுக்கு அர்ப்பணித்து 733 ஆண்டுகளாகிறது.

இதை நினைவுகூர்ந்து நன்றி செலுத்தும் வகையில் பவானி காலிங்கராயன் அணைக்கட்டில் அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஈரோடு ஆட்சியர் வே.க.சண்முகம், முன்னாள் அமைச்சர் கே.வி.ராமலிங்கம், மொடக்குறிச்சி எம்எல்ஏ கிட்டுசாமி, ஈரோடு மேயர் மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிச்சாமி, ஈரோடு ஒன்றியக் குழுத் தலைவர் கண்ணம்மாள் முத்துசாமி, சித்தோடு பேரூராட்சித் தலைவர் ஆர். வரதராஜன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி சார்பில் மாவட்டச் செயலர் துரை.ராஜா தலைமையில் காலிங்கராயன் உருவப் படத்துக்கு மாலை அணவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட இளைஞரணிச் செயலாளர் கணபதி, பவானி ஒன்றியச் செயலாளர் மூர்த்தி, அவைத் தலைவர் எஸ்.எஸ்.கே.சுப்பிரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாட்டின் உணவு உற்பத்தி இதுவரை இல்லாத சாதனையை எட்டும்



நாட்டின் உணவு உற்பத்தி இந்த ஆண்டு 4 சதவீதத்தை எட்டுவதுடன், கடந்த ஆண்டுகளின் சாதனைகளை முறியடிக்கும் என்று குடியரசுத்தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலம், புணே மாவட்டத்திலுள்ள பாராமதி நகரில் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி பேசியதாவது:

இந்த ஆண்டு நாட்டின் உணவு உற்பத்தியானது 2011-2012ஆம் ஆண்டு அளவான 259 மில்லியன் டன்னையும், அதற்கு முந்தைய ஆண்டு அளவான 250 மில்லியன் டன்னையும் முறியடிக்கும் வகையில் அமையும். மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவைக்குழு வேளாண்துறையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

வேளாண்துறையில் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளராக மட்டுமல்லாமல், ஏற்றுமதியாளராகவும் இந்தியா மாறியுள்ளது. கோதுமை, சர்க்கரை மற்றும் பருத்தி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்த ஆண்டுக்கான முதல் அரையாண்டில் வேளாண் வளர்ச்சி 3.6 சதவீதமாக உள்ளது.

இது எதிர் வரும் காலங்களில் 4 சதவீதத்தை எட்டும். தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதன் மூலம் நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

**தேங்காய் கொள்முதல் பணி: கூட்டுறவு அதிகாரிகள் ஆய்வு**

தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி, குடியாத்தத்தில் இருந்து சென்னைக்கு அனுப்ப உள்ள தேங்காய்களை, கூட்டுறவு அதிகாரிகள் சனிக்கிழமை ஆய்வு செய்தனர்.

குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், சென்னையில் உள்ள பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனை செய்ய தேங்காய்கள் கடந்த 6 மாதங்களாக அனுப்பபப்படுகின்றன.

இந்நிலையில் உற்பத்தி குறைவு காரணமாக, சென்னை மார்க்கெட்டுகளில் தேங்காய்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் தேங்காய் அதிகம் விளையும் குடியாத்தம் உள்ளிட்ட சில ஊர்களில் இருந்து, தேங்காய்களைக் கொள்முதல் செய்து சென்னையில் உள்ள பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனைச் செய்ய கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

இதையடுத்து கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் எஸ்.ஆர். வெங்கடேசன் தலைமையில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் சனிக்கிழமை குடியாத்தம் வந்தனர். குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைசங்கத்தில், அதன் தலைவர் ஜே.கே.என். பழனி, முன்னாள் செயலர் வி.ஜி. நடராஜன் உள்ளிட்டோரிடம் அவர்கள் ஆலோசனை நடத்தினர். அதைத் தொடர்ந்து சங்கத்தின் சார்பில், உற்பத்தியாளர்களிடம் இருந்து சுமார் 30 ஆயிரம் தேங்காய்களை கொள்முதல் செய்து வந்து, தேங்காய்கள் நார் உரிக்கும் பணிகள் தொடங்கின. இப்பணிகளை மண்டல இணைப் பதிவாளர் எஸ்.ஆர். வெங்கடேசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். முதல் கட்டமாக 10 ஆயிரம் தேங்காய்களை சென்னைக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வேலூர் சரகக் கூட்டுறவு துணைப் பதிவாளர் டி.கே. பிரபாகரன், மேலாண்மை இயக்குநர் சா. குமரேசன், கள அலுவலர்கள் ஜி. சாந்தா, கே. அருள்பெரும்ஜோதி, தா. மகேந்திரன், பி. கன்னியப்பன், ஆர். அருணகிரி, சங்கத் தணிக்கை அலுவலர் ஜி. பொன்னம்பலம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்குதல்

கலசப்பாக்கத்தை அடுத்த பத்தியவாடியில் விவசாயிகளுக்கு விவசாய ஒருங்கிணைந்த கையேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக முதல்வரின் பண்ணை பயிர் மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களின் நிலத்தின் தன்மையை அறிந்துகொள்ளும் வகையில் மண் மாதிரி சேகரிக்கப்பட்டு அதுகுறித்த விபரங்களை விவசாயிகளுக்கு

ஒருங்கிணைந்த கையேடாக வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கலசப்பாக்கம் தாலுகாவில் மொத்தமுள்ள குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டது. அவற்றின் எண்ணிக்கை 17850.

இதில் 13000 பண்ணைக் குடும்பங்களின் அடிப்படை புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு மண் மாதிரி சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் பத்தியவாடி ஊராட்சி மன்றத் தலைவர் நடராஜன் உள்ளிட்ட விவசாயிகளுக்கு கலசப்பாக்கம் எம்.எல்.ஏ.அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கையேடுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் எஸ்.சுந்தரம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நைனாக் கண்ணு, ஒன்றியச் செயலாளர் எம்.திருநாவுக்கரசு, தொகுதிச் செயலாளர் எஸ்.கோவிந்தராஜ், கூட்டமைப்புத் தலைவர் கே.சி.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் சந்திரா தங்கராஜ், வேளாண்மை அலுவலர் ராமகிருஷ்ணன், உதவி விதை அலுவலர் குப்புசாமி, சிவராமன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பாண்டுரங்கன், நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மதுரை வேளாண்மைக் கல்லூரியில் விதைப் பண்ணை பயிற்சி முகாம்**

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் சார்பில், விதைப் பண்ணை தொழில்நுட்பப் பயிற்சி முகாம் 3 நாள்கள் நடைபெற உள்ளதாக, கல்லூரி முதல்வர் சி. சின்னுசாமி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழக அரசு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து, விதைப் பண்ணை அமைத்தல் தொடர்பாக மூன்று நாள் பயிற்சியை, மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நடத்தவுள்ளது. ஜனவரி 20 முதல் 22 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்பயிற்சியில், விதைப் பண்ணை அமைப்பது, பராமரிப்பது, சேமிப்பது, தரச்சான்று பெறுதல், விநியோகித்தல் உள்ளிட்ட அனைத்து

தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கப்படும். மேலும், இதற்குத் தேவையான நிதி குறித்த விவரங்களும் வழங்கப்படும். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, தொழில்முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளரின் 87542-13353 கைப்பேசி எண்ணுக்குத் தொடர்புகொண்டு, தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு, கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

**இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாருக்கு நினைவஞ்சலி**

இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வாரின் நினைவஞ்சலி கூட்டம் திண்டுக்கல் நேருஜி நகரில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட விவசாயிகள் சங்க அமைப்புச் செயலர் ச. நிக்கோலாஸ் தலைமை வகித்தார். சமீபத்தில் காலமான நம்மாழ்வாருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நம்மாழ்வாரின் கல்வி முறை மற்றும் இயற்கை விவசாய தொழில் நுட்பங்களை பரவலாக்குவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும் பிப்ரவரி 1ஆம் தேதி (சனிக்கிழமை) திண்டுக்கல் நகரில் நம்மாழ்வாரின் நினைவேந்தல் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 16 பேர் கொண்ட செயல்பாட்டுக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் முருங்கை விஞ்ஞானி ஏ.பி. அழகர்சாமி, ஏரி மற்றும் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பரமசிவம், நிர்வாகிகள் பீட்டர், பிலிப் சுதாகர், அன்புமலர், ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"மீனவர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பின் கடலோரக் காவல்படையை அழைக்கலாம்'**



இந்திய கடல் எல்லை பகுதியில் மீனவர்களுக்கு அச்சுறுத்தல் ஏதும் இருப்பின் கடலோரக் காவல்படையை அழைக்கலாம். இதற்கான வசதிகளை கடலோரக் காவல்படை அமைத்துள்ளது என இந்திய கடலோரக் காவல்படை கிழக்குப் பிராந்திய கமாண்டர் எஸ்.பி.சர்மா ஞாயிற்றுக்கிழமை சென்னையில் தெரிவித்தார்.

இந்திய கடலோரக் காவல்படையின் 38-ஆவது ஆண்டு தினத்தை ஒட்டி கிழக்கு பிராந்தியம் சார்பில் கடலில் ஒரு நாள் (ஈஅவ அப நஉஅ) என்ற நிகழ்ச்சி சென்னைத் துறைமுகத்திற்கு வெளியே நடுக்கடலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கடலோரக் காவல்படையின் சாகர், சாரங், விஸ்வாஸ், ராஜ்கமல் உள்ளிட்ட 8 ரோந்துக் கப்பல்கள் கடலில் அணிவகுத்தன. மேலும் ஹோவர் கிராப்ட், ஹெலிகாப்டர்கள், ரோந்து விமானங்கள் இதில் பங்கேற்றன. அப்போது கடலில் தத்தளிக்கும் மீனவர்களை மீட்டெடுத்தல், கப்பல்களில் ஏற்படும் தீயை அணைத்தல், கடத்தல்காரர்களை விரட்டிச் சென்று பிடித்தல், எண்ணெய் படலங்களை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை கடலோரக் காவல்படை வீரர்கள் நடத்திக் காட்டினர். இதனை பல்வேறு படை பிரிவுகளைச் சேர்ந்த வீரர்களின் குடும்பத்தினர் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு ரசித்தனர். 200 கப்பல்கள்: சாகச நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் சாகர் கப்பலில் இருந்தவாறே கிழக்குப் பிராந்திய கமாண்டர் எஸ்.பி.சர்மா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: கடலோரக் காவல்படையின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள், வீரர்களின் குடும்பத்தினர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்திய கடலோரக் காவல் படையில் தற்போது 58 கப்பல்கள், 56 அதிவேகப் படகுகள், 14 ஹெலிகாப்டர்கள், 63 ரோந்து விமானங்கள் உள்ளன.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் பணியாற்றுகின்றனர். இப்படையின் திறனை அதிகப்படுத்தும் பொருட்டு கப்பல்களின் எண்ணிக்கையை 200 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான கப்பல்கள் பல்வேறு தளங்களில் கட்டப்பட்டு வருகின்றன. ஹெல்ப் லைன் தொலைபேசி 1554: இலங்கை, இந்திய

மீனவர்கள் பேச்சுவார்த்தையில் பங்கேற்குமாறு கடலோரக் காவல் படைக்கு அழைப்பு ஏதும் இல்லை. எனவே இப்பேச்சுவார்த்தையில் இப்பிரச்னை குறித்து எங்களது கருத்து ஏதும் கூற வாய்ப்பு இல்லை. இந்திய கடல்பகுதியில் மீனவர்கள் தாக்கப்படுவதில்லை. இருப்பினும் அவ்வாறு ஏதேனும் அச்சுறுத்தல் இருந்தால் காவல் படையில் ஹெல்ப்லைன் தொலைபேசி எண் 1554-க்கு தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொண்ட ஐந்து நிமிடங்களுக்குள் பாதுகாக்கும் நடவடிக்கைகளைத் தொடர்வோம். இதற்கு வசதியாக தமிழக பகுதிகளில் மீனவர்கள் எளிதாகத் தொடர்பு கொள்ளும் வகையில் தமிழ் தெரிந்த அதிகாரிகளை இதற்காக தற்போது நியமனம் செய்துள்ளோம். 24 மணி நேரமும் இந்த வசதி கிடைக்கும். ஆமைகளைக் காக்க முயற்சி: மீனவர்களைப் பாதுகாப்பது இப்படையின் முக்கிய பணிகளில் ஒன்றுதான். அதே நேரம் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இந்திய கடலோரப் பகுதிகளில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா, கல்பாக்கம், கூடங்குளம் அனுமின் நிலையங்கள் உள்ளிட்டவைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளில் காவல்படை ஈடுபட்டு வருகிறது. தமிழக கடலோரப் பகுதியில் கடல் ஆமைகள் இறந்து மிதக்கும் சம்பவம் அதிகரித்து வருகிறது. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இது குறித்து எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளையுடன் இணைந்து ஆமைகள் இறப்பதற்கான காரணங்கள், தவிர்க்கும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடத்தி வருகிறோம். துறைமுகங்களுக்கு கட்டணம்: தூத்துக்குடியில் புதிய விமான தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் இக்காவல்படைக்கு என தனித் துறைமுகம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை. ஆனால் தூத்துக்குடி, காரைக்கால், சென்னை, எண்ணூர், கிருஷ்ணாபட்டினம், விசாகக்பட்டினம், காகிநாடா உள்ளிட்ட துறைமுகங்களில் கடலோரக் காவல்படையின் கப்பல் தளங்களை ஏற்படுத்தும் பணியும், ஏற்கனவே உள்ள வசதிகளை அதிகரிக்கும் பணியும் தொடர்ந்து நடந்து வருகின்றன. மேலும் அனைத்து துறைமுகங்களுக்கும் கப்பல்களை நிறுத்த கட்டணம் செலுத்தி வருகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது என்றார் சர்மா. பேட்டியின்போது பாதுகாப்புத் துறை மக்கள் தொடர்பு அதிகாரி ஆண்டவன் உடனிருந்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வறட்சியால் வைக்கோல் விலை கிடுகிடு: வியாபாரிகள் முன்பதிவு

வறட்சியால், பசுந்தீவனத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதை சமாளிக்க, விவசாயிகளிடம், வைக்கோலுக்கு, முன்பதிவு செய்து, வியாபாரிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கொள்முதல் செய்கின்றனர். சேலம் மாவட்டத்தில், கடந்த ஏப்ரல், மே மாதங்கள், கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. நடப்பாண்டும், பருவ மழை குறைந்தால், கோடையில், பசுந்தீவனத்துக்கு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. தற்போது, காவிரி கரையோர மாவட்டங்களில், சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ளது.
இதனால், தீவன பற்றாக்குறையை சமாளிக்க, கால்நடை வளர்ப்போர் மற்றும் வியாபாரிகள், காவிரி விவசாயிகளிடம், போட்டி போட்டு வைக்கோல் கொள்முதல் செய்கின்றனர். இதனால், வைக்கோல் விலை, கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் அர்ஜுனன் கூறியதாவது:
இரண்டு ஆண்டுகளுக்கு முன், கால்நடை வளர்போர், வியாபாரிகள், ஒரு ஏக்கர் நிலத்தில் அறுவடை செய்யும் வைக்கோலை, 6,000 ரூபாய்க்கு, கொள்முதல் செய்தனர். தற்போது, அதே வைக்கோல், 10 ஆயிரம் முதல், 12 ஆயிரம் ரூபாய் வரை, கொள்முதல் செய்கின்றனர். வியாபாரிகள் பலர், மூன்று மாதத்துக்கு முன், சாகுபடி துவங்கும் போதே, வைக்கோலுக்கு, 'அட்வான்ஸ்' கொடுத்து விட்டனர். அட்வான்ஸ் கொடுத்தவர்களுக்கு மட்டுமே, தற்போது, வைக்கோல் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

நெல்லை விட மவுசு : மேட்டூர், காவிரி கரையோர மாவட்டங்களில், இரு ஆண்டுக்கு முன், ஒரு மூட்டை (65 கிலோ), பொன்னி நெல், 1,000 ரூபாய்க்கு விற்றது. தற்போது, ஒரு மூட்டை நெல், 1,100 ரூபாய்க்கு விற்கிறது. அதேநேரம், இரு ஆண்டுக்கு முன், 6,000 ரூபாய்க்கு விற்ற வைக்கோல், தற்போது, 12 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.வறட்சியால், சமீபகாலமாக, நெல்லை விட, வைக்கோலுக்கு மவுசு அதிகரித்து வருகிறது.

## புதிய காற்றழுத்த தாழ்வு நிலை : சென்னையில் லேசான தூறல்

சென்னை:வங்கக்கடலில், உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, வட தமிழக பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை புறநகர் பகுதிகளில், நேற்று காலை லேசான மழை பெய்துள்ளது.

வங்கக்கடலில், 10 நாட்களுக்கு முன் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதி, லட்சத்தீவுகள் அருகில் மறைந்த நிலையில், அதே பகுதியில் மீண்டும் காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகியுள்ளது.

அதே நேரம், தென்கிழக்கு வங்கக்கடலில், மேலும், ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது.

இதன் காரணமாக, வடதமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே, லேசான மழை பெய்யக்கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மழை, அடுத்த, 48 மணி நேரத்திற்கு நீடிக்கும் என கூறப்பட்டுள்ளது. மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, சென்னையில் புறநகர் பகுதிகளான, திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில், லேசான தூறலுடன் மழை பெய்தது. தொடர்ந்து, நேற்று காலை மற்றும் மாலையிலும், ஆங்காங்கே சில இடங்களில், லேசான தூறல் விழுந்தது.

## அறுவடை நேரத்திலும் அரிசி விலை...குறையவில்லை! ஆந்திராவில் புயல் பாதிப்பு எதிரொலி



கடலூர்:காவிரி டெல்டா பகுதியில் நெல் அறுவடை துவங்கியும் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசி விலை குறையாமல் தொடர்ந்து அதே விலையில் நீடித்து வருகிறது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் நெல் மகசூல் பாதிக்கப்பட்டது. அதனால் அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்தது.

இந்த ஆண்டு பருவமழை ஓரளவு பெய்தது. இதன் காரணமாக சம்பா நெல் விளைச்சலில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. தற்போது கடலூர் மாவட்டத்தில் நெல் அறுவடைப்பணி துவங்கி நடந்து வருகிறது. 30 சதவீதத்திற்குமேல் அறுவடை பணி முடிந்துள்ளது. ஆனால் ஏற்கனவே அறுவடை இல்லாத நேரத்தில் உயர்த்தப்பட்ட அரிசி விலை தொடர்ந்து அதே விலை யில் விற்கப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் சன்ன ரகமான பி.பி.டி., நெல் ஒரு மூட்டை(75கிலோ) 1100 ரூபாய் அளவிலும், பொன்னி நெல் 1400 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

காவிரி டெல்டா பகுதியில் உள்ள அரசு கொள்முதல் நிலையங்களில் சன்னரகம் ஒரு கிலோ 14.15 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. அதன்படி அதிகபட்சமாக ஒரு கிலோ நெல்லில் 66 சதவீதம் அரிசி கிடைக்கும். நெல் அறுவடை துவங்காத நிலையில் கடந்த மாதம் பி.பி.டி., அரிசி கிலோ 36 முதல் 40 ரூபாய் அளவில் விற்பனையானது.

நெல் அறுவடை துவங்கியதும் கடைகளில் அரிசிவிலை கணிசமாக குறையும். ஆனால், இந்தாண்டு 30 சதவீதம் அளவிற்கு அறுவடை பணி நடந்து முடிந்துள்ள போதிலும், அரிசி விலை பெரிய அளவில் குறையவில்லை.

பொங்கல் முடிந்து முழு வீச்சில் அறுவடை நடந்து வருகிறது. ஆனால் தற்போதும், 25 கிலோ பி.பி.டி., 880 ரூபாய்க்கும், பழையது 1000 ரூபாய்க்கும், பொன்னி 1100க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

நமக்கு பெரிய அளவில் அரிசி வரத்து ஆந்திராவில் இருந்து வரவழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு பைலின் புயலுக்குப்பின் அடுத்து வந்த புயல் காரணமாக ஆந்திராவில் பெய்த கனமழைக் காரணமாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக வழக்கமாக கிடைக்கக்கூடிய மகசூலில் குறைவான அளவுதான் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் தமிழகத்தில் பருவமழை குறைவாக பெய்ததால் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளில் தண்ணீர் மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் நவரை பட்டத்தில் நெல் நடவு முழு அளவில் நடைபெறுவது மிகவும் கடினம். நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் மட்டுமே நடவு செய்ய முடியும். அதனால் நவரைப்பட்டத்தில் நெல் குறைவான அளவே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் அரிசி விலை தொடர்ந்து அதே நிலையில் நீடித்து வரும் என வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

## வேர்க்கடலையில் பச்சைப்புழு தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானி அறிவுரை

மங்கலம்பேட்டை:மங்கலம்பேட்டை பகுதியில் சாகுபடி செய்துள்ள வேர்க்கடலை செடிகளில் பச்சைப் புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மங்கலம்பேட்டை அடுத்த சின்னவடவாடி, எறுமனூர், விஜயமாநகரம், எம்.பட்டி, முகாசபரூர் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் கார்த்திகை பட்டத்தில் 3,500 ஏக்கரில் வேர்க்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சின்னவடவாடி, எ.வடக்குப்பம் பகுதியில் வளர்ந்துள்ள வேர்க்கடலை செடிகளில் பச்சைப்

புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் குறையுமென விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுப்ரமணியன் கூறியதாவது:

கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்த வேர்க்கடலை செடிகளை பச்சைப் புழுக்கள் (புரோடீனியா) அதிகமாக தாக்கும்.

இந்த புழுக்கள் பகல் நேரங்களில் மண்ணுக்குள் சென்று விடும். மாலை 4:00 மணிக்கு மேல் வெளியே வரும். அவற்றை கட்டுப்படுத்த குளோரோபைரிபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 3 மி., கலந்து தெளிக்கலாம். அல்லது ஏக்கருக்கு ஐந்து கிலோ தவிடு, அரை கிலோ காய்ச்சிய வெல்லம், கர்பரில் மருந்து அரை கிலோ ஆகியவற்றை கலந்து சிறு உருண்டைகளாக பிடித்து, வயலில் ஆங்காங்கே வைக்கலாம். புழுக்களை அழிக்க மாலை நேரத்தில் மருந்து தெளிக்கலாம். அல்லது ஏக்கருக்கு டைக்ளோர்வாஸ் 300 மி., மருந்தை லிட்டருக்கு அரை மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

வேர்க்கடலை வயலின் வரப்பைச் சுற்றி ஆமனுக்கு செடிகளை விதைத்தால் புழுக்கள் வேர்கடலை செடிகளுக்கு வருவதை கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சி பொறி வைத்து தாய் அந்துபூச்சியை அழிக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் மீண்டும்...கோமாரி? அச்சிறுபாக்கம் ஒன்றியத்தில் மருத்துவர்கள் ஆய்வு

மதுராந்தகம்:250 மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாக வெளியாகி உள்ள தகவலை அடுத்து, காஞ்சிபுரம் மாவட்டத் தில் இந்த கொடிய நோய் மீண்டும் பரவுகிறதோ என்ற, அச்சம் எழுந்து உள்ளது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் கடந்த சில மாதங்களுக்கு முன் கோமாரி நோய் பரவி, ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்தன.

தடை விலக்கல் இதையடுத்து, கடந்த ஆண்டு நவம்பர் 31ம் தேதி முதல்,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாட்டுச் சந்தை நடத்த தடை விதிக்கப்பட்டது.
பின்னர், நோய் கட்டுப்படுத்தப்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டு, கடந்த 7ம் தேதி இந்த தடை விலக்கப்பட்டது.
இந்த நிலையில், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட தண்டரை - புதுச்சேரி ஊராட்சியில், உடு0க்கும் மேற்பட்ட மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், ஐந்து மாடுகள் நோய் தாக்கத்தால் இறந்துவிட்டதாகவும் மாவட்ட கால்நடை துறைக்கு நேற்று முன்தினம் தகவல் கிடைத்தது.
இதையடுத்து, மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன், நேற்று காலை 11:00 மணி அளவில், அந்த கிராமத்திற்குச் சென்று, நிலைமையை ஆய்வு செய்தார். தொடர்ந்து, கால்நடை மருத்துவர்கள் எட்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு, தண்டரை - புதுச்சேரி கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களான கூடலூார், கழினிப்பாக்கம், தண்டலம், கோழியாளம், தண்டரை உள்ளிட்ட கிராமங்களுக்குச் சென்று, அறிகுறியுள்ள மாடு களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.
பரிசோதனைக்கு பின் இது குறித்து, கால்நடை துறை, இணை இயக்குனர் கோவர்த்தனன் கூறுகையில், "கோமாரியில் ஏழு வகை உள்ளன. அறிகுறி உள்ள மாடுகளிடமிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு உள்ளன. முடிவு வந்த பிறகே கோமாரி நோய் தாக்கியுள்ளதா என்பது தெரிய வரும்," என்றார்.
மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் கூறுகையில், "கோமாரி நோயால் மாடுகள் இறந்ததாக கூறுவது தவறான கருத்து. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத்தான் ஆய்வு நடந்தது," என்றார்.

## ஏர் உழும் விவசாய கருவிகளுக்கு மானியம்...ரூ.30 ஆயிரம்! நெல் உற்பத்தியை பெருக்க அரசு முயற்சி

திருத்தணி:விவசாயிகள், நெல் பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையில், மானிய விலையில் ஏர் உழும் கருவி (ரோட்டோவேட்டர்) மற்றும் தார்ப்பாய் வழங்க, அரசு, நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நெல் சாகுபடிக்காக...

திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போது, கூலியாட்கள் பற்றாக்குறை, ஏர் உழுவதற்கு மாடுகள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் பெரும்பாலான விவசாயிகள், நெல், வேர்க்கடலை பயிர்களை தவிர்த்து, கரும்பு, சவுக்கு ஆகிய பயிர்களுக்கு மாறியுள்ளனர். விவசாயிகளை மீண்டும் நெல் சாகுபடி பக்கம் இழுப்பதற்காக, 96 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஏர் உழும் கருவியை வாங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. அதே போல் தானியங்களை பாதுகாக்க 4,000 ரூபாய் மதிப்புள்ள தார்பாய்க்கு 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதற்கான அரசாணை கடந்த 10ம் தேதி வெளியிடப்பட்டது.

190 விவசாயிகள் இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:

விவசாயிகள் பயிர் செய்வதற்கு வசதியாக, மாவட்டத்தில், 40 பேருக்கு ஏர் உழும் கருவிகள், 150 பேருக்கு, தார்ப்பாய் ஆகியவை, அரசு மானியத்துடன் வழங்கப்பட உள்ளது. இதற்காக, விவசாயிகள், நிலத்தின் கணினி சிட்டா, ரேஷன் கார்டு ஆகிய நகல்களுடன், அந்தந்த பகுதியில் உள்ள, வேளாண் துறை அலுவலகத்தில் மனு கொடுக்கலாம். அரசு மானியம் கழித்து, மீதமுள்ள தொகைக்கு, வரைவு காசோலை வாங்கிக் கொண்டு, யார் முதலில் சமர்ப்பிக்கிறார்களோ, அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், விவசாய கருவிகள் வழங்கப்படும். வரும் மார்ச் மாதம் வரை விவசாயிகள் மனு கொடுத்து கருவிகள் பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாததால் 1000 ஏக்கர் நெற்பயிர் கருகும் அவலம்

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டை அருகே பாசன வாய்க்காலில் கடந்த 20 நாட்களாக தண்ணீர் திறந்துவிடாததால் 1000 ஏக்கரில் சாகுபடி செய்த நெற்பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் வேதனையில் தவிக்கின்றனர்.
டெல்டா பாசனத்தின் கடை மடை பகுதியான பரங்கிப்பேட்டை ஒன்றிய கிராமங்களில் உள்ள விளை நிலங்கள் அரியகோஷ்டி வாய்க்கால் முலம் பாசனம் பெற்று வருகிறது. இப்பகுதியில் பெரும் பாலான விவசாயிகள் நேரடி விதைப்பு செய்துள் ளனர்.
தொடர்ந்து மழை பெய்து வந்ததாலும், அரிய கோஷ்டி வாய்க்காலில் வந்த தண்ணீரைக் கொண்டு விவசாயிகள் நெற்பயிரை காப்பாற்றி, களை எடுத்து உரம், பூச்சிமருந்து தெளித்து வந்ததால் நெற்பயிர் நன்கு வளர்ந்தது.
இந்நிலையில் கடந்த மாதம் அரியகோஷ்டி வாய்க்காலில் சுமார் அரை அடி அளவே தண்ணீர் வந்தது. இதனை வயலுக்கு பாய்ச்ச முடியாததால் நெற்பயிர்கள் கருகத் துவங்கின.
ஆவேசமடைந்த அரியகோஷ்டி உள்ளிட்ட நான்கு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடக்கோரி கடந்த மாதம் பு.முட்லூரில் சாலை மறியல் செய்ய முயன்றனர். அதனைத் தொடர்ந்து அரியகோஷ்டி வாய்க்காலில் சில நாட்கள் போதுமான அளவிற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. விவசாயிகள் நெற்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சினர். தற்போது நெற்பயிர்கள் கதிர் வந்த நிலையில் உள்ளன.
இந்நிலையில் கடந்த 20 நாட்களாக அரியகோஷ்டி வாய்க்காலில் குறைந்த அளவே தண்ணீர் திறந்துவிடப்படுவதால் நெற்பயிர்களுக்கு தண்ணீர் செல்லவில்லை. இதனால் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருவதால் விவசாயிகள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் கண்டுக்கொள்ளவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர். விவசாயிகளின் நலன்கருதி அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயி பரமசிவம் கூறுகையில், இந்தாண்டு அதிகளவு நேரடி நெல் விதைப்பும், நடவு பயிரும் செய்துள்ளோம். ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 20 நாட்களாக அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் வராததால் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. வீராணத்தில் போதிய அளவு தண்ணீர் இருந்தும், அரியகோஷ்டி வாய்க் காலில் தண்ணீர் திறக்க அதிகாரிகள் மறுப்பது வேதனையாக உள்ளது என்றார்.

## வேர்க்கடலையில் பச்சைப்புழு தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானி அறிவுரை

மங்கலம்பேட்டை:மங்கலம்பேட்டை பகுதியில் சாகுபடி செய்துள்ள வேர்க்கடலை செடிகளில் பச்சைப் புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மங்கலம்பேட்டை அடுத்த சின்னவடவாடி, எறுமனூர், விஜயமாநகரம், எம்.பட்டி, முகாசபரூர் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் கார்த்திகை பட்டத்தில் 3,500 ஏக்கரில் வேர்க்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சின்னவடவாடி, எ.வடக்குப்பம் பகுதியில் வளர்ந்துள்ள வேர்க்கடலை செடிகளில் பச்சைப் புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் குறையுமென விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுப்ரமணியன் கூறியதாவது: கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்த வேர்க்கடலை செடிகளை பச்சைப் புழுக்கள் (புரோடீனியா) அதிகமாக தாக்கும். இந்த புழுக்கள் பகல் நேரங்களில் மண்ணுக்குள் சென்று விடும். மாலை 4:00

மணிக்கு மேல் வெளியே வரும். அவற்றை கட்டுப்படுத்த குளோரோபைரிபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 3 மி., கலந்து தெளிக்கலாம். அல்லது ஏக்கருக்கு ஐந்து கிலோ தவிடு, அரை கிலோ காய்ச்சிய வெல்லம், கர்பரில் மருந்து அரை கிலோ ஆகியவற்றை கலந்து சிறு உருண்டைகளாக பிடித்து, வயலில் ஆங்காங்கே வைக்கலாம். புழுக்களை அழிக்க மாலை நேரத்தில் மருந்து தெளிக்கலாம். அல்லது ஏக்கருக்கு டைக்ளோர்வாஸ் 300 மி., மருந்தை லிட்டருக்கு அரை மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வேர்க்கடலை வயலின் வரப்பைச் சுற்றி ஆமனுக்கு செடிகளை விதைத்தால் புழுக்கள் வேர்கடலை செடிகளுக்கு வருவதை கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சி பொறி வைத்து தாய் அந்துபூச்சியை அழிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நெற்பயிர் வரப்பில் உளுந்து: விவசாயிகள் புதிய முயற்சி

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் நெற்பயிர் சாகுபடி வயல் வரப்புகளில் விவசாயிகள் உளுந்து பயிரிட்டு உள்ளனர்.கள்ளக்குறிச்சி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகின்ற தருணங்களில் சொட்டு நீர் பாசனத்தில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.கள்ளக்குறிச்சி பகுதியில் மரவள்ளி, கரும்பு, தென்னை, மஞ்சள் போன்ற நீண்ட கால பயிர்களில் ஊடுபயிராக மூன்று மாத பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து, லாபம் ஈட்டி வருகின்றனர். தற்போது குடும்ப தேவைக்காக புது வித முயற்சியாக நெற் பயிரிலும் ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்து வருகின்றனர். சோமண்டார்குடி, காரனூர், நல்லாத்தூர் உள்ளிட்ட கிராம பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் வயல்களின் வரப்புகளை சுற்றிலும், விவசாயிகள் உளுந்து விதைத்துள்ளனர்.நெற் பயிருக்கு பாய்ச்சும் தண்ணீர் உளுந்து பயிருக்கும் போதுமானதாக உள்ளது. இதனால் வரப்புகளை சுற்றிலும் விதைக்கப்பட்டுள்ள உளுந்து செழிப்புடன் வளர்ந்து காணப்படுகிறது.குடும்ப தேவைக்காக வரப்புகளில் உளுந்து விதைத்துள்ளதாகவும், நெல் அறுவடையின் போது உளுந்தும் அறுவடைக்கு தயாராகி விடுமென விவசாயிகள் தெரிவித்தனர்.

## நெல் கொள்முதல் செய்ய மேட்டூரில் வியாபாரிகள் முகாம்

மேட்டூர்: மேட்டூர் காவிரி கரையோரம் நெல் அறுவடை துவங்கியுள்ளதால், சின்னசேலம், கள்ளக்குறிச்சி வியாபாரிகள், மேட்டூரில் முகாமிட்டு, நெல் கொள்முதல் செய்கின்றனர்.

மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்காக, காவிரி மற்றும் மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் நீர்திறக்கப்பட்டது. இதனால், மேட்டூர் காவிரி கரையோர பகுதிகளில், விவசாயிகள் சம்பா பருவத்தில் பொன்னிரக நெல் சாகுபடி செய்தனர். விழுப்புரம் மாவட்டத்தில், அரிசி ஆலைகள் அதிக அளவில் உள்ளது. தற்போது, மேட்டூர் காவிரி கரையோர பகுதியில் பொன்னி நெல் அறுவடை நடப்பதால், நெல் கொள்முதல் செய்வதற்காக, விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் மேட்டூரில் முகாமிட்டுள்ளனர்.

இவர்கள், விவசாயிகளிடம் பொன்னி நெல்லை மொத்தமாக கொள்முதல் செய்து, லாரிகளில் கொண்டு செல்கின்றனர். தற்போது, காவிரி கரையோரத்தில், 64 கிலோ எடையுள்ள, ஒரு மூட்டை பொன்னி நெல், 1,100 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். நடப்பாண்டு, நெல் விலை உயராதது விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

## பச்சை மிளகாய் விலை குறைவு: விவசாயிகள் கலக்கம்

கிருஷ்ணகிரி: பச்சை மிளகாய் விலை குறைவால், கிருஷ்ணகிரி அடுத்த வேப்பனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி, சூளகிரி சுற்றுவட்டார கிராமங்களில், 500 ஹெக்டேரில் ஆண்டுதோறும் மிளகாய் சாகுபடி செய்யப்படும். இங்கு சாகுபடி செய்யப்படும் மிளகாய், ஓசூரில் உள்ள மொத்த மிளகாய்

மார்க்கெட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கிருந்து வெளிமாவட்டங்கள் மற்றும் பெங்களூருவுக்கு விற்பனைக்கு எடுத்து செல்லப்படும்.
கடந்த ஒரு மாதத்துக்கு முன், ஒரு கிலோ பச்சை மிளகாய், 15 ரூபாய்க்கு, ஓசூர் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டது. இதனால், மிளகாய் சாகுபடி செய்த விவசாயிகள், தங்கள் தோட்டத்தில் விளைந்த பச்சை மிளகாயை பறித்து, அதிக அளவில் ஓசூருக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்தனர்.இந்நிலையில், வெளி மாவட்டங்களில் அதிகளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டதால், வரத்து அதிகரித்து பச்சை மிளகாய் விலை கிடுகிடுவென குறைந்தது.

தற்போது, ஒரு கிலோ பச்சை மிளகாய், நான்கு ரூபாயில் இருந்து ஐந்து ரூபாய் வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. திடீர் விலை குறைவால், வேப்பனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில், மிளகாய் சாகுபடி செய்த விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.வேப்பனப்பள்ளியை அடுத்த தடத்தாரையை சேர்ந்த மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ராமன் கூறியதாவது:
பொங்கல் திருவிழா மற்றும் தை மாதங்களில் வரும் முகூர்த்த தினங்களை குறி வைத்து மிளகாய் சாகுபடி செய்து வருகிறோம். தற்போது வரத்து அதிகரிப்பால், பச்சை மிளகாய் விலை குறைந்துள்ளதால், பச்சை மிளகாய் பறிப்பதை தவிர்த்து வருகிறோம்.

இதற்கு மாறாக, மிளகாயை செடியிலேயே விட்டு, அவை பழுத்த பின், அதனை பறித்து வெயிலில் காயவைத்து, வறமிளகாயை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம். தற்போது, வேப்பனப்பள்ளியில் அதிகளவிலான விவசாயிகள், பழுத்த மிளகாயை மட்டுமே அறுவடை செய்து வருகின்றனர். வரமிளகாய் விலை அதிகரிக்கும் நேரத்தில், வரமிளகாயை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம், என்றார்.

## மஞ்சள் விலைக்கு இனி நிரந்தர தீர்வு ஜன., 26ல் இ-டிரேடிங் முறை துவக்கம்

ஈரோடு: மஞ்சள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், இந்தியாவில் முதன் முறையாக, ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், ஜன., 26 முதல், இ-டிரேடிங் ஏலம் முறை அமலாகவுள்ளது. தங்கத்துக்கு நிகராக விற்பனையான மஞ்சள், இன்று கட்டுபடியான விலை கிடைக்காமல், மஞ்சள் உற்பத்தி நாளுக்கு குறைந்து வருகிறது. இந்நிலையில், மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், இடைத்தரகர்களின் இடையூறின்றி, மஞ்சளை உற்பத்தி செய்த விவசாயிகளே, ஒருங்கிணைந்து நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யும் வகையில் புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன் முறையாக, "விவசாயிகள் ஒருங்கிணைந்த மஞ்சள் வர்த்தக மேலாண்மை' என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், விவசாயிகள் குழுக்களாக இணைந்து செயல்பட, ஒரு தளம் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் பொறுப்பில், இந்த வர்த்தகம் செயல்பட உள்ளது. இப்புதிய வர்த்தக முறை ஜன., 26ம் தேதி முதல் துவங்கும். மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நல்ல விலை கிடக்க, தமிழக அரசு இ-டிரேடிங் முறை துவங்கப்பட உள்ளது. கல், மண் நீக்கி, சுத்தம் செய்து கொண்டு வரும் மஞ்சளுக்கு, கூடுதலான விலை கிடைக்கும் வகையிலும், தரநிர்ணயம் செய்யப்பட்டு, விற்பனை செய்ய வழி செய்யப்படுகிறது. விவசாயிகள் தங்கள் மஞ்சளை, தங்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கும் வரை, இந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், 2,000 டன் இருப்பு வைக்க குடோன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பு வைக்கும் மஞ்சளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்பட உள்ளது. இ-டிரேடிங் மூலம் தேசிய மற்றும் உலக அளவில் விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படும். இதற்காக நாடு முழுவதும், "காம்லைவ்' என்ற சாஃப்ட்வேர் உருவாக்கப்பட்டுள்ளது.

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூட, கண்காணிப்பாளர் அலுவலகத்தில், இதற்காக தனி கம்ப்யூட்டர் அறை உருவாக்கப்பட்டுள்ளது. இதில்

தொகுப்பூதியத்தின் அடிப்படையில், தனியார் நிறுவனம் ஒன்று, ஒப்பந்த அடிப்படையில், பணியாளர்கள் நியமிக்கிறது. புதிதாக மஞ்சள் கொண்டு வரும் விவசாயிகளின் பெயர், ஊர், விலாசம், மஞ்சளின் விபரம் ஆகியவை கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும். வெள்ளிக்கிழமை மட்டும் ஏலம் நடக்கும். விவசாயிகள், தங்கள் விளைபொருட்களின் அதிகபட்ச விலையை எஸ்.எம்.எஸ்., மூலம் பெற்றுக்கொள்ளலாம். அதற்கான ஒப்புதலை, ஒரு மணி நேரத்துக்குள் டெலிபோன் மூலம் தெரிவித்தால், மஞ்சள் விற்றுக்கொடுக்கப்படும், என்றனர்.

## கால்நடைகளுக்கு புதிய ரக தீவனங்கள் விற்பனை

திண்டுக்கல்: திண்டுக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பயிற்சி மையத்தில் புதிய ரக தீவனங்கள் விற்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி மைய தலைவர் பீர்முகமது கூறியதாவது: கால்நடைகளின் திறனை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில் தொழில்நுட்பங்களுடன் கூடிய புதிய ரக தீவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், கறவை மாடு களின் பால் சுரக்கும் தன்மையை அதிகரிக்க தாதுக்கலவை, டானுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து, செல்லப் பிராணிகளுக்கான டானுவாஸ் சத்தான உணவுகள் ஆகியவை மானிய விலையில் பயிற்சி மையத்தில் விற்கப் படுகின்றன. தவிர, அதிக உடல் எடை தரக்கூடிய டார்செட் நீலகிரி கலப்பின செம்மறி, நாமக்கல் கோழி, அதிக முட்டை இடக்கூடிய கோல்டு காடை ஆகியவற்றை விவசாயிகள் வளர்க்கலாம், என்றார்.

## மாவட்டத்தில் வைக்கோல் வினியோகம் ஒத்திவைப்பு

திண்டுக்கல்:ஒப்பந்ததாரர்களிடமிருந்து தேவையான வைக்கோல் பெறுவதற்கு காலஅவகாசம் அளிக்கப்பட்டுள்ளதால், மானிய விலையிலான வைக்கோல் ஜன., 20 முதல் வினியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக மானியத்தில் வைக்கோல் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. இதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் ஐந்து மையங்களின் மூலம் வைக்கோல் வினியோகிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்ததாரர்கள் தேர்வு கடந்த கலெக்டர் வெங்கடாசலம் முன்னிலையில் நடந்தது. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வைக்கோல் பெறுவதற்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து மையங்களிலும் வைக்கோல் இருப்பு வைக்கப்பட்ட பின், ஜன., 20 ல் இருந்து தீவன அட்டைகள் பெற்ற விவசாயிகளுக்கு கிலோ ரூ. 2 விலையில் வைக்கோல் வினியோகிக்கப்படவுள்ளது. மாவட்டத்தில் இதுவரை 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், மானியத்தில் வைக்கோல் பெறுவதற்காக தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தீவன அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிகபட்சம் ஐந்து மாடுகளுக்கு தேவையான வைக்கோலை பெற்றுக்கொள்ளலாம், என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழை இல்லாமல் வாடும் ஏலச் செடிகள்

கம்பம்:கடந்த 2 மாதங்களாக மழை இல்லாததால், ஏலச் செடிகள் வாடி வதங்கி வருகின்றன. கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும், வறட்சி காலங்களில் பயன்படுத்த வேண்டுமே என ஏல விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.
கேரளா, இடுக்கி மாவட்டத்தில் பீர்மேடு, உடுப்பன்சோலை, தேவிகுளம் தாலுகாக்களில் ஏலக்காய் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்படும், ஏலக்காய்க்கு நல்ல மழை வேண்டும்.
கனமழை இல்லாமல், சாரலாக இருக்க வேண்டும். அதுவும் தொடர்ந்து பெய்தால் அழுகல் நோய் தாக்கும்.
கடந்த 2 மாதங்களில், இடுக்கி மாவட்டத்தில் மழை பெய்யவில்லை. இதனால் ஏலச்செடிகள் வாடி வதங்கி வருகின்றன. பூக்கள் பூத்து, காய் பிடிப்பு குறைந்து விடும். ஏலத்தோட்டங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஓரளவிற்கு உள்ளது. இந்த தண்ணீரை, கடும் வறட்சி நிலவும், பிப்., மார்ச்., மாதங்களில் பயன்படுத்துவார்கள். இப்போதே பயன்படுத்தினால், வறட்சி காலங்களில் சிக்கல்

ஏற்படும்.ஏலக்காய் சாகுபடி ஆலோசகர் அன்பழகன் கூறுகையில்,"" கடந்த 2 மாதங்களாக, மழை இல்லாதது ஏலச்செடிகளுக்கு பாதிப்பு தான். ஆனால், சில பகுதிகளில் இடையிடையே சிறிது மழை பெய்தது. இருந்தாலும் மழை இல்லாதது, ஏலக்காய் சாகுபடிக்கு பிரச்னையை ஏற்படுத்தும். இந்த அடுத்த மாதத்திற்குள், மழை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு ஒரு மழை பெய்தால் தான், ஏலச் செடிகள் நல்ல நிலையில் இருக்கும்' என்றார்.

## மக்காச்சோள அறுவடை உத்திகள் குறித்த விளக்கம்

விருதுநகர்: மக்காச்சோள அறுவடை உத்திகள் குறித்து, வேளாண் வணிக துணை இயக்குனர் முத்துமுனியாண்டி கூறியுள்ளதாவது: மாவட்டுத்தீவன உற்பத்தியில் மக்காச்சோளம் முக்கிய இடம் பிடிப்பதால், நல்ல விற்பனை வாய்ப்புள்ளது. நமது மாவட்டத்தில அதிக பரப்பில், மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 60வது நாளில் இருந்து 85 நாட்களுக்குள் இதன் கதிர்கள் முதிர்ச்சியடையும். முதிர்ந்த கதிர்களை ஒருவாரம் வரை பயிரிலேயே காயவிட்டு அறுவடை செய்து, இயந்திரத்தின்மூலம் அடித்து மணிகளைப்பிரித்து, மூன்று நாட்கள் காய வைத்து விற்பனை செய்யலாம். காயவைத்த கதிர்களில் இருந்து மணிகளை பிரித்துஎடுத்து கதிர் அடிக்கும் கருவிகள் அல்லது கல் உருளைகளைப்பயன்படுத்தி தானியத்தை பிரிக்க வேண்டும். மக்காச்சோளத்தை கதிர் அடிக்கும் இயந்திரம் மூலம் எளிதில் பிரிக்கலாம். அதனை நன்கு காயவைக்காவிட்டால், விரைவில் வண்டுகள் தாக்கி அதன்தரம் பாதிக்கப்படும். மழை பெய்யும் நாட்களில் அறுவடை செய்தால் பூஞ்சாணம் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. அறுவடை செய்து, காய வைக்கப்பட்ட மணிகளின் காம்பு முனையை அடிக்கும்போது நமத்துப்போகாமல் உடைத்தால், காய்ந்து விட்டது எனத்தெரிந்து கொள்ளலாம். மக்காச்சோளத்தின் ஈரப்பதத்தை அறிந்துகொள்ள, ஈரமானியை பயன்படுத்த வேண்டும்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**முட்டை விலை 350 காசாக நிர்ணயம்**



நாமக்கல்: நாமக்கல் முட்டை விலை 350 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழுகூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் முட்டை பண்ணை கொள்முதல் விலையில், 5 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் விலை 350 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகை, தைப்பூசம் முடிந்துள்ளதால் முட்டை விற்பனை தமிழகம் முழுவதும் சற்று உயர்ந்து வருகிறது. இதனால் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ54 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ89 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**இருப்பு இல்லாததால் பாசிப்பருப்பு ரூ 200 உயர்வு**



விருதுநகர்: பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ200ம், மல்லி மூட்டைக்கு ஸி100ம், கடலை  புண்ணாக்கு மூட்டைக்கு ரூ150ம் உயர்ந்துள்ளது.

பாமாயில் டின்னுக்கு ரூ5 குறைந்துள்ளது. பாசிப்பருப்பு புதுவரத்து தஞ்சை பகுதியிலிருந்து ஏப்ரல், மே மாதங்களில் வரும் என்ற நிலையில், இருப்பும் இல்லாததால் பாசிப்பருப்பு தொடர்ந்து விலை உயர்ந்து வருகிறது. இந்த வாரமும் பாசிப்பருப்பு மூட்டைக்கு ரூ200 விலை உயர்ந்துள்ளது. பாசிப்பயறு லயன் ரூ7,000 லிருந்து ரூ7,200, நாடு பாசிப்பயறு ரூ6,500லிருந்து ரூ6,700, பாசிப்பருப்பு லயன் ரூ9,400 லிருந்து ரூ9,600, நாட்டு பாசிப்பருப்பு ரூ8,900லிருந்து ரூ9,100 என அதிகரித்துள்ளது. வரும் வாரங்களில் மேலும் விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். ராஜஸ்தான் மல்லி வரத்து குறைந்துள்ள நிலையில், உள்ளூர் மல்லி வரத்தும் இல்லாததால் மல்லி விலை (40கிலோ) மூட்டைக்கு ரூ100 உயர்ந்துள்ளது.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



சென்னை: ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தற்போது பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 137 கன அடி கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது. 2011ம் ஆண்டு வரதயபாளையம் அருகே உப்பளமடுகு பகுதியில் கால்வாய் உடைந்ததால் ரூ.50 லட்சத்தில், 70 மீட்டர் தூரத்துக்கு இணை கால்வாய் அமைக்கப்பட்டு, அதன் வழியாக கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு கடந்தாண்டு மார்ச் மாதம் உப்பளமடுகு பகுதியில் ரூ.6.5 கோடியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு அதன்வழியாக கடந்த 10ம்தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 2500 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த 12ம்தேதி தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட் பகுதிக்கு, வினாடிக்கு 15 கன

அடியாக வந்த தண்ணீர், கடந்த 14ம்தேதி 114 கன அடியாகவும், 17ம்தேதி 135 கன அடியாகவும் உயர்ந்தது. நேற்று காலை 147 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. பூண்டி ஏரிக்கு 137 கன அடி செல்கிறது. தற்போது பூண்டி ஏரியில் 123 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. கிருஷ்ணாநீர் வருவதற்கு முன்பு பூண்டி ஏரியில் 93 மி.கன அடி தண்ணீர் இருந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு 53 கன அடியும், குடிநீர் சுத்திகரிப்புக்காக பேபி கால்வாய் வழியாக 10 கன அடியும் வெளியேற்றப்படுகிறது. கண்டலேறு அணையில் இருந்து, கடந்த ஜூலை முதல் அக்டோபர் வரை 4 மாதத்தில் 8 டிஎம்சி தண்ணீர் வரவேண்டும். ஆனால் இதுவரை தமிழகத்துக்கு 1.8 டிஎம்சி தண்ணீரே வந்துள்ளது. ஆந்திர, தமிழக நதிநீர் ஒப்பந்தப்படி தமிழகத்துக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரவேண்டும். 3 டிஎம்சி சேதாரம் போக 12 டிஎம்சி வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**காஷ்மீரில் பனிப் பொழிவு இயல்பு வாழ்க்கை பாதிப்பு**



ஸ்ரீநகர்: காஷ்மீரில் கடந்த 40 நாட்களாக கடுமையான பனிப் பொழிவு இருந்தது. அதனால், சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் முடங்கியது. அத்தியாவசியப் பொருட்கள் சப்ளையும் பாதிக்கப்பட்டது. தற்போது இரவில் மட்டும் கடும் குளிர் நிலவுகிறது. நேற்று பகலில் சிறிது நேரம் வெயில் அடித்தது. தலைநகர் ஸ்ரீநகரில் இரவில் குறைந்தபட்சமாக 3.6 டிகிரி செல்சியஸ் பதிவானது, நேற்று முன்தினம் இரவு 3.5 டிகிரி செல்சியஸ் பதிவானது. பகலில் சிறிது குளிர் குறைந்துள்ளது. அதே போன்று காஷ்மீரின் தென் பகுதியில் 9.0 டிகிரி செல்சியஸ் பதிவானது.

இன்றைய வேளாண் செய்திகள்

**நடப்பு ரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பளவு 3.13 கோடி ஹெக்டேரை எட்டியது**



புதுடெல்லி

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) இதுவரை கோதுமை சாகுபடி பரப்பளவு, இதுவரை இல்லாத அளவிற்கு 3.13 கோடி ஹெக்டேரை எட்டியுள்ளது என விவசாயத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.95 கோடி ஹெக்டேராக இருந்தது. எனவே, உணவு தானியங்கள் உற்பத்தி ஒட்டு மொத்த அளவில் முந்தைய சாதனை அளவை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<u>பருவமழை</u>

ரபி பருவ வேளாண் பணிகள் அக்டோபர் மாதத்தில் தொடங்கி மார்ச் மாதம் நிறைவடையும். கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள் ஆகியவை

இப்பருவத்தில் பிரதானமாக பயிரிடப்படுகின்றன. பருவமழை நன்றாக இருந்தது மற்றும் தாமதமான மழை காரணமாக நிலத்தில் தொடர்ந்து ஈரத் தன்மை இருந்தது சாகுபடி பணிகளுக்கு மிகவும் சாதகமாக இருந்தது. நடப்பு பருவத்தில் இதுவரை ரபி பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பளவு 6.25 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 5.96 கோடி ஹெக்டேராக இருந்தது.

பருப்பு பயிரிடும் பரப்பளவு 1.56 கோடி ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.49 கோடி ஹெக்டேராக இருந்தது. எண்ணெய் வித்துகள் சாகுபடி பரப்பளவு 84.10 லட்சம் ஹெக்டேரிலிருந்து 86.70 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

அக்டோபர் மாதத்திலிருந்து இதுவரை நெல் பயிரிடும் பரப்பளவு 10.51 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 7.67 லட்சம் ஹெக்டேராக இருந்தது. சிறு தானியங்கள் சாகுபடி பரப்பளவு மட்டும் 58.50 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 60 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

நடப்பு வேளாண் பருவத்தில் (2013 ஜூலை – 2014 ஜூன்) கோதுமை உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 10 கோடி டன்னாக அதிகரிக்கும் என்றும், மேலும் உணவு தானியங்கள் உற்பத்தி முந்தைய சாதனை அளவை மிஞ்சும் என்றும் மத்திய விவசாய துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார். 2011–12 வேளாண் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 25.93 கோடி டன்னாக உயர்ந்திருந்தது.

<u>இலக்கு</u>

ரபி பருவத்தில் 9.25 கோடி டன் கோதுமை, 1.20 கோடி டன் பருப்பு, 1.40 கோடி டன் அரிசி, 44 லட்சம் டன் மக்காச்சோளம் மற்றும் 15 லட்சம் டன் பார்லியும் உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**குறைந்தபட்ச விலை குறைக்கப்பட்டதால் வெங்காயம் ஏற்றுமதி அதிகரிப்பு**



பூனா

ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை மத்திய அரசு டன் ஒன்றுக்கு 150 டாலராக குறைத்ததால் வெங்காயம் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

இந்தியா முன்னிலை

இந்தியாவிலிருந்து வெங்காயம் அதிகம் வாங்கும் நாடுகளில் வங்காளதேசம் ஒன்று. அங்கு தற்போது தேவைப்பாடு அதிகமாக உள்ளது. கொல்கத்தாவிலிருந்து ஒருநாள் விட்டு ஒருநாள் வங்காளதேசத்திற்கு வெங்காயம் சென்று கொண்டிருக்கிறது. சீனாவின் வெங்காயம் ஏற்றுமதி தற்போது குறைந்துள்ளது. இதுவும் நமக்கு சாதகமாக உள்ளது. பாகிஸ்தான், ஈரான், எகிப்து ஆகிய நாடுகள் கடும் போட்டியை ஏற்படுத்தி வந்தாலும், குறைந்தபட்ச ஏற்றுமதி விலை குறைக்கப்பட்ட பிறகு வெங்காயம் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்துள்ளது. தற்சமயம் இதில் இந்தியாவே முன்னிலையில் உள்ளதாக வெங்காயம் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் அஜித் ஷா கூறினார்.

ஏற்றுமதிக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், உள்நாட்டுத் தேவை காரணமாக வரத்து அதிகமாக உள்ள நிலையிலும் வெங்காயம் விலை நிலையாக இருந்து வருகிறது. எனினும் உற்பத்தி அமோகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளதால் விரைவில் வெங்காயம் விலை சரிவடைய வாய்ப்புள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. நாட்டின் பல பகுதிகளில் தற்போது மொத்த

விற்பனையில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.8 முதல் ரூ.10 வரை உள்ளது. சில்லறை விற்பனை விலை கிலோவிற்கு ரூ.20 முதல் ரூ.25–ஆக உள்ளது.

விலை குறையும்

என்றாலும் விரைவில் விலை ரூ.2–3 குறையும் என வர்த்தகர்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும் ஏற்றுமதி விலை முழுமையாக நீக்கப்பட்டால் உள்நாட்டில் வெங்காயம் விலை சரிவதை தடுக்க முடியும் என்பது அவர்களின் கருத்தாக உள்ளது. கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) உற்பத்தியான வெங்காயம் தற்போது சந்தைகளுக்கு வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம், குஜராத், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் விளைந்த வெங்காயம் பிற மாநிலங்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி உயரும்**



மும்பை

நடப்பு பருவத்தில் (2013 அக்டோபர் – 2014 செப்டம்பர்) பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அதிகரித்துள்ளதால் சாகுபடி பரப்பளவு மற்றும் விளைச்சல் அதிகரிக்க உள்ளதாக ஆய்வு நிறுவனமான கேர் ரிசர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படும் அனைத்துப் பகுதிகளிலும் பருவமழை நன்றாக இருந்ததால் ஒட்டுமொத்த அளவில் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது. நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.78 கோடி பொதிகளாகவும், பயன்பாடு 3 கோடி பொதிகளாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தி கொண்டதாகும்.

கடந்த சில ஆண்டுகளாக பருத்தி உற்பத்தி அதிகரித்து வருகிறது. குறைந்தபட்ச விலையை மத்திய அரசு அதிகரித்ததையடுத்து விவசாயிகள் பருத்தி பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஜவுளித்துறை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதமும், மொத்த ஏற்றுமதியில் 17 சதவீதமும் இத்துறை பங்களிப்பை கொண்டுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது**



மேட்டூர்,

மேட்டூர் அணைக்கு கடந்த சில மாதங்களாகவே நீர்வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. கடந்த மாதம் அணைக்கு வினாடிக்கு 1,000 கனஅடி முதல் 1,500 கனஅடி வரை தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது கடந்த வாரம் வினாடிக்கு 100 கனஅடியாக குறைந்தது.

இந்த நிலையில் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று மேலும் குறைந்து வினாடிக்கு 70 கனஅடியாக வந்தது. இதற்கிடையே, டெல்டா பாசனத்திற்காக

அணையில் இருந்து வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.நீர்வரத்தைவிட திறப்பு அதிகமாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்து கொண்டே வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 53.23 அடியாக இருந்தது.

**தர்மபுரியில் கோடைக்காலம் தொடங்கும் முன்பே விற்பனைக்கு குவிந்த தர்ப்பூசணி**



தர்மபுரி,

கோடைக்காலம் தொடங் கும் முன்பே தர்மபுரி யில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்துள் ளது. ஒரு கிலோ ரூ.20-க்கு விற் பனை செய்யப்படும் பழங் களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

தர்ப்பூசணி

தமிழகத்தில் சேலம் மாவட் டம் மேச்சேரி, பண்ருட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் தர்ப்பூசணி அதிக அள வில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக தர்மபுரி மாவட்டத்தில் மொரப் பூர், அரூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி களில் தர்ப்பூசணியை விவசாயிகள் பயிரிட்டு உள் ளனர். சொட்டு நீர்ப்பாசனம் மூலம் குறைந்த தண்ணீரில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் அதிக அளவில் தர்ப்பூசணி பயிரிட்டுள்ள னர்.

இந்த தர்ப்பூசணிக்கு பொது மக்களிடையே அதிக வர வேற்பு உள்ளதாலும், நல்ல விலை கிடைப்பதாலும் வியா பாரிகள் இப்போதே நேரிடை யாக சென்று விவசாயிகளிடம் குத்தகை அடிப்படையில் கொள்முதல் செய்து வருகின் றனர். இதனால் பெரும் பாலான விவசாயிகள் தர்ப் பூசணி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விற்பனைக்கு குவிந்தது

இந்தநிலையில் கோடைக் காலம் தொடங் கும் முன்பே தர்மபுரிக்கு தர்ப்பூசணி வரத்து தொடங்கி உள்ளது. எஸ்.வி.ரோடு, டேக்கீஸ் பேட்டை, பாரதிபுரம், சந்தைப் பேட்டை, அப்பாவு நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் இப்போதே அதிக அள வில் தர்ப்பூசணி பழங்கள் குவித்து வியா பாரிகள் விற் பனை செய்து வருகின்றனர். அதே போன்று பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பி ரெட்டிப்பட்டி, மொரப்பூர் உள்ளிட்ட பகுதிகளிலும் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை படுஜோராக நடை பெற்று வருகிறது. தற்போது நிலவும் பனிக் காலத்தையும் பொருட் படுத்தாமல் பொதுமக்கள் தர்ப்பூசணி பழங்களை ஆர் வத்துடன் வாங்கி செல்கின் றனர். தர்மபுரி மாவட்டத்தில் ஒரு கிலோ ரூ.20 வரை தர்ப் பூசணி விற்பனை செய்யப் படுகிறது. பெரும்பாலான தள் ளுவண்டி வியாபாரிகள் தர்ப் பூசணி பழங்களை அறுத்து ரூ.5, ரூ.10 என விற்பனை செய்து வருகின்றனர். தற் போது பனிக்காலத்திலும் பொதுமக்கள் தர்ப்பூசணி பழங்களைவாங்கி சுவைத்து வருகின்றனர்.

**கோமுகி அணை நீர்மட்டம் குறைந்ததால் பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தம்**



கச்சிராயப்பாளையம்,

கோமுகி அணையில் நீர்மட்டம் குறைந்ததால் விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது.

நீர்மட்டம் குறைவு

கச்சிராயப்பாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை உள்ளது. இங்கு கடந்த மாதம் வடகிழக்கு பருவமழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் 42 அடியாக உயர்ந்தது.

இதையடுத்து கடந்த டிசம்பர் மாதம் 8-ந் தேதி சம்பா பருவத்துக்காக தண் ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 11 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெற்றது.

விவசாயிகள் பாதிப்பு

அணை பகுதியில் தொடர்ந்து மழை பெய்யாத தால், நீர்மட்டம் வேகமாக குறைந்தது. கடந்த சில நாட் களுக்கு முன்பு 21 அடியாக நீர்மட்டம் குறைந்தது. இதை யடுத்து அணையில் உள்ள கட்லா, மிருகால் வகையை சேர்ந்த 1½ லட்சம் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக பாசனத்துக்கு திறந்துவிடும் தண்ணீர் நிறுத்தப்பட்டது.

இதனால் வாய்க்கால் பாச னத்தை நம்பி நடவு செய்த கடைமடை பகுதி விவசாயிகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. மேலும் குறுகிய காலத்திலேயே தண்ணீர் நிறுத்தப்பட்டதால் பாசன கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

**கீரமங்கலம் பகுதியில் எலுமிச்சை பழம் வரத்து அதிகரிப்பு விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை**



கீரமங்கலம்

கீரமங்கலம், கொத்தமங் கலம், வடகாடு பகுதியில் எலுமிச்சை பழம் வரத்து அதிகரித்துள்ள நிலையில், விலை குறைந்ததால், விவ சாயிகள் கவலை அடைந் தனர்.

எலுமிச்சை பழம்: கீரமங்கலம், கொத்த மங்கலம், வடகாடு, மாங் காடு, சேந்தன்குடி, நகரம், மேற்பனைக்காடு, பனங்குளம், குளமங்கலம், செரியலூர் மற்றும் சுற்று வட்டார கிராமங் களில் வறட்சியின் காரணமாக விவசாயம் குறையத் தொடங் கிய காலத்தில், பலன் தரும் மரங்களை நடவு செய்தனர் விவசாயிகள். அந்த வகையில் எலுமிச்சை பழம் அதிக அளவு உற்பத்தியாகத் தொடங் கியது.

கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதிகளில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 10 டன் வரை எலுமிச்சை பழம் உற்பத்தி கிடைத்தது. அதே நேரத்தில் ஒரு கிலோ பழத்தின் விலையும் சுமார் ரூ.40 முதல் 70 வரை இருந்தது.

விவசாயிகள் கவலை

ஆனால் கடந்த சில மாதங் களாக எலுமிச்சை பழம் விலை ஏற்றம் இன்றி தொடர்ந்து ஒரு கிலோ பழத்தின் விலை ரூ.10 முதல் ரூ.15-க்குள் உள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை யடைந்துள்ளனர். மேலும் கடந்த சில நாட்களாக பழத் தின் உற்பத்தியும் அதிக மாக உள்ளது. இது பற்றி கீரமங்கலம் பகுதி விவசாயிகள் கூறுகை யில், கீரமங்கலம் பகுதியில் மலர்களைப் போல அதிக மான எலுமிச்சை உற்பத்தி உள்ளது. ஒவ்வொரு ஊரி லும் கமிஷன் கடைகள் வைத்து பழங்களை வாங்கி மதுரைக்கு அனுப்புகிறார்கள். ஆனால் உற்பத்திக்கான கட்டுப் படியான விலை கிடைக்க வில்லை, என்று கவலையுடன் கூறினர்.

**திண்டுக்கல்லில் தக்காளி விலை வீழ்ச்சி கிலோ ரூ.10–க்கு விற்பனை**



திண்டுக்கல், சைவம், அசைவம் ஆகிய 2 வகை சமையலுக்கும் தக்காளி தேவையானது. சமையலில் 2 தக்காளியை சேர்த்தாலே அதற்கு தனி சுவை வந்து விடும். சமையலில் தக்காளிக்கென்று தனி இடம் உண்டு. இந்நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தக்காளி வரத்து இல்லாததால் விலை ஏறுமுகமாக இருந்தது. இதனால் ஒரு கிலோ தக்காளி ரூ. 60 முதல் ரூ.80 வரை விற்பனை ஆனது. இதையொட்டி ஆந்திர மாநிலத்தில் இருந்து தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டதும் படிப்படியாக விலை குறைந்தது. இந்நிலையில் திண்டுக்கல்லின் சுற்றுப்புற கிராமங்களில் விளைவிக்கப்பட்ட தக்காளி வரத்து கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது. இப்போது அதிகளவில் தக்காளி வந்து கொண்டு இருக்கிறது. இதனால் விலை குறைந்து நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்னும் வரத்து அதிகமாகும். இதனால் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது என்று தக்காளி வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாரம்பரிய நெல்லைக் காக்கும் கரங்கள்



கார், அன்னமழகி, இலுப்பைப்பூ சம்பா, ஒட்டடையான், மாப்பிள்ளைச் சம்பா, கருங்குறுவை, நவரா, கல்லுண்டை, கருடன் சம்பா. இப்படி ஒவ்வொரு பெயரும் வித்தியாசமாக இருக்கும் அனைத்தும், நம் பாரம்பரிய நெல் வகைகளின் பெயர்கள். இதுபோல இந்தியா முழுவதும் ஒரு லட்சம் நெல் வகைகள் இருந்துள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 10 ஆயிரம் பாரம்பரிய நெல் வகைகளை நம் முன்னோர் பயிரிட்டுள்ளனர். ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் கூடிய நவீன வேளாண்மையின் வரவு ஆயிரக்கணக்கான பாரம்பரிய நெல் வகைகளை நம் மண்ணில் இருந்தே துரத்திவிட்டது.

வெள்ளம், வறட்சி என இயற்கைச் சீற்றங்களையும், பூச்சித் தாக்குதல்களையும் தாங்கி நின்று வளர்வது மட்டுமின்றி, ஏராளமான மருத்துவ குணங்களைக் கொண்டவை நமது பாரம்பரிய நெல் வகைகள். அத்தகைய சிறப்புக்குரிய நெல் வகைகள் வெறும் பழங்கனவாய் போய்விடுமோ என்று பலரும் கவலைப்பட்டு

வந்த நேரத்தில், "நமது நெல்லைக் காப்போம்" என்ற பெயரில் உருவான ஓர் இயக்கம், இன்றைக்கு மாபெரும் மக்கள் இயக்கமாக மலர்ந்து தமிழகம், கேரளம், கர்நாடகம், ஒடிசா, மேற்கு வங்கத்தில் 700க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் வகைகளை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் கிரியேட் என்ற நுகர்வோர் உரிமைகளுக்கான அமைப்பின் சார்பில் ‘நமது நெல்லைக் காப்போம்’ இயக்கம் செயல்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் மத்தியில் பாரம்பரிய நெல் வகைகளின் மகத்துவத்தை உணர்த்தி, அவர்களைப் பாரம்பரிய நெல் சாகுபடி முறையின் பக்கம் இந்த இயக்கம் திருப்பி வருகிறது.

நமது நெல்லைக் காப்போம் இயக்கம் குறித்து அதன் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமனிடம் பேசினேன்:

“விவசாயத் தொழிலில் அதிகரித்து வரும் நெருக்கடிகள் காரணமாக ஆண்டுதோறும் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தபடியே உள்ளது. இந்தச் சூழலில் இயற்கை வழி வேளாண்மையையும், பாரம்பரிய நெல் சாகுபடி முறைகளால் மட்டுமே விவசாயிகளையும், விவசாயத் தொழிலையும் காப்பாற்ற முடியும் என்று வலியுறுத்தி, சமீபத்தில் மறைந்த ஐயா நம்மாழ்வாரின் கருத்துகளை ஏற்று எங்கள் இயக்கம் பயணிக்கிறது.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மே கடைசி வாரத்தில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிராமத்தில் நெல் திருவிழாவை நடத்துகிறோம். குமரி முதல் செங்கல்பட்டு வரையிலான அனைத்து மாவட்டங்கள், அண்டை மாநிலங்களில் இருந்து இந்தத் திருவிழாவுக்கு விவசாயிகள் வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இதுவரை 18 ஆயிரம் விவசாயிகளுக்குப் பாரம்பரிய நெல் வகைகளை விநியோகித்துள்ளோம்.

ஆதிரெங்கம் கிராமத்தில் இயற்கை வேளாண் சாகுபடி முறையில் பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிடுவதுடன், நேரடி களப் பயிற்சியும் அளித்து வருகிறோம்.

நடப்புச் சாகுபடி ஆண்டில் மட்டும் எங்கள் இயக்கம் மூலம் ஆதிரெங்கம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், உளுந்தூர்பேட்டை, நன்னிலம், சிவகங்கை உள்ளிட்ட 13 ஊர்களில் 152 பாரம்பரிய நெல் வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் உளுந்தூர்பேட்டை 鐥 சாரதா ஆசிரமத்தின் பங்களிப்பு அதிகம்.

ஆதிரெங்கம் கிராமத்தில் மட்டும் கருப்பு கவுணி, சிவப்பு கவுணி, சீரகச் சம்பா, வாசனை சீரகச் சம்பா, மடுமுழுங்கி, வாடன் சம்பா, கருடன் சம்பா, கைவரை சம்பா, இலுப்பை பூ சம்பா, அறுபதாம் குறுவை, பூங்கார், காட்டு யானம், தேங்காய்ப்பூ சம்பா, கிச்சடி சம்பா என 33 பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிட்டுள்ளோம்” என்கிறார் ஜெயராமன்.

**இயற்கை முறை சாத்தியமா?**

பொதுவாக விவசாயிகளின் விளைபொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. அதிலும் நெல் விவசாயிகளுக்குப் பெரிய லாபம் கிடைப்பதில்லை. இந்தச் சூழலில் இயற்கை விவசாயத்தின் பக்கம் பெரும்பகுதி விவசாயிகளைத் திருப்புவது சாத்தியமா?

“விவசாயம் அதிக லாபம் தரும் தொழிலாக மாற வேண்டுமானால், இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகள் நிச்சயம் மாற வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகிறோம். ஏனென்றால், இயற்கை வழி சாகுபடி முறையில் சாகுபடிச் செலவு மிகமிக குறைவு.

தற்போதைய சாகுபடி முறையில் நாற்றங்காலைத் தயார்படுத்தி, நாற்று விட வேண்டுமானால் ஏக்கருக்குக் குறைந்தபட்சம் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரம் வரை ஆகும். ஆனால், இயற்கை வழி சாகுபடி முறையில் 2 கிலோ விதை நெல் செலவைத் தவிர, வேறு எந்தச் செலவும் இல்லை. அந்த 2 கிலோ நெல்லைகூட இலவசமாகவே தருகிறோம். கூலி ஆள் தேவை இல்லாமல், நாமே நாற்றங்கால் தயார் செய்து நாற்று விட்டுவிடலாம்.

நடவுக்கு முன்னதாக நாற்று பறிப்பதற்கு ஏக்கருக்குக் குறைந்தது ரூ.2 ஆயிரம் தேவைப்படும். இயற்கை வழி விவசாயத்தில் அந்தச் செலவும் இல்லை. ரசாயன உரங்களோ, பூச்சிக்கொல்லி மருந்துகளோ வாங்கத் தேவையில்லை. மக்கிய தொழு உரம், எல்லோராலும் தயார் செய்யக் கூடிய பஞ்சகவ்யம் போன்றவற்றைப் பயன்படுத்தினால் போதும். அறுவடைப் பணிக்கு மட்டும் தற்போதைய முறையைப் போலச் செலவு செய்ய வேண்டியிருக்கும்" என்கிறார்.

**மகசூல் எப்படி?**

சாகுபடிச் செலவு குறைகிறது சரி, மகசூல் எப்படி இருக்கும்?

"ஒரு மாவுக்கு 8 மூட்டை, அதாவது ஏக்கருக்கு 24 மூட்டைக்குக் குறைவாகக் கிடைப்பதில்லை. அத்துடன் தமிழ்நாட்டில் இயற்கை வழி சாகுபடி முறையில் உற்பத்தியாகும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் பணியைத் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை மற்றும் மருத்துவ வல்லுநர்கள் கூட்டமைப்பு செய்து வருகிறது.

கிரியேட் அமைப்பின் தலைவர் பேராசிரியர் பி.துரைசிங்கம், மேலாண்மை அறங்காவலர் இரா.பொன்னம்பலம் ஆகியோர் வழிகாட்டலில் கேரளத்தின் தணல், கர்நாடகத்தின் சகஜ சமர்தா, ஒடிசாவின் லிவிங் ஃபார்ம், மேற்கு வங்கத்தின் சேவா ஆகிய அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதால் நாடு தழுவிய ஒருங்கிணைப்பு கொண்ட ஓர் இயக்கமாக எங்கள் அமைப்பு செயல்பட்டு வருகிறது" என்று ஜெயராமன் கூறுகிறார்.

கிராமங்கள்தோறும் நமது நெல்லைக் காப்போம் இயக்கம் போன்ற முயற்சிகள் மலர்ந்தால் மறைந்துபோன நமது பாரம்பரிய வேளாண் முறை கூடுமானவரை உயிர்ப்பிக்கப்படும் என்ற நம்பிக்கை இப்போது துளிர்க்கிறது.

## தூத்துக்குடி: விளாத்திகுளம் வறட்சியை சமாளிக்க முந்திரி தோட்டக்கலைத்துறை உதவியுடன் விவசாயிகள் அசத்தல்



வறட்சியை சமாளிக்கும் வகையில், விளாத்திகுளம் பகுதியில் முந்திரி சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசு மானிய உதவியுடன் 10 ஹெக்டேரில், 5 விவசாயிகள் முந்திரி பயிரிட்டுள்ளனர்.

**வறட்சியில் விளாத்திகுளம்**

தூத்துக்குடி மாவட்டத்தில் மிகவும் வறட்சியான பகுதியாக விளாத்திகுளம் வட்டம் உள்ளது. வடகிழக்கு பருவமழையை நம்பியே இப்பகுதி விவசாயம் உள்ளது. பெரும்பாலும் மானாவாரி சாகுபடிதான் நடைபெறுகிறது.

கடந்த இரண்டு ஆண்டாக வடகிழக்கு பருவமழை சரியாக பெய்யவில்லை. இந்த ஆண்டும் பருவமழை பொய்த்துப் போனது. ஆண்டு தோறும் பருவமழை குறைந்து வருவதால் விவசாயப் பரப்பும் சுருங்கி வருகிறது. இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் இப்பகுதி விவசாயம் கேள்விக்குறியாகும்.

**முந்திரி சாகுபடி அறிமுகம்**

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை சார்பில்

பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விளாத்திகுளம் பகுதியில் முதல் முறையாக முந்திரி சாகுபடியை தோட்டக்கலைத்துறை அறிமுகம் செய்துள்ளது. சூரங்குடியில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 10 ஹெக்டேரில், முந்திரி கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

**குறைந்த நீர்**

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் பழனி வேலாயுதம் கூறியதாவது:

முந்திரியைப் பொறுத்தவரை குறைந்த தண்ணீர் தேவையும், வறட்சியைத் தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்டது. இதனால், இப்பகுதியில் முந்திரியை அறிமுகம் செய்துள்ளோம். கிழக்கு கடற்கரையை ஒட்டிய சூரங்குடியில் செம்மண் பரப்பில் முந்திரி கன்றுகள் முதல் முறையாக நடவு செய்யப்பட்டுள்ளன. 5 விவசாயிகளை தேர்வு செய்து, தலா 2 ஹெக்டேரில் வி.ஆர்.ஐ. 3 என்ற ரக முந்திரி கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**ரூ. 20,000 மானியம்**

முந்திரி விவசாயிகளுக்கு முதலாண்டில் மானியமாக ரூ. 12 ஆயிரம் மதிப்புள்ள கன்றுகள், இடுபொருட்கள், உரம் வழங்கப்படுகின்றன. பயிரை பாதுகாக்க 2 மற்றும் 3-ம் ஆண்டுகளிலும் மானிய உதவிகள் வழங்கப்படும். 3 ஆண்டுக்கு ஹெக்டேருக்கு ரூ. 20 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

**அதிக லாபம்**

முந்திரி பயிர்கள் 3 முதல் 4 ஆண்டுகளில் பலன் கொடுக்கும். முதல் ஆண்டில் ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 3 கிலோ கிடைக்கும். இது படிப்படியாக உயர்ந்து 7 கிலோ வரை கிடைக்கும். ஒரு கிலோ முந்திரி ரூ. 400 முதல் 500 வரை விலை போகிறது. முந்திரி நீண்ட காலம் பலன் தரும். விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றார் அவர்.

**விவசாயி நம்பிக்கை**

சூரன்குடியை சேர்ந்த விவசாயி செ.முனி யாண்டி கூறுகையில், “2 ஹெக்டேரில் முந்திரி நடவு செய்துள்ளேன். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராஜகுமார், விளாத்திகுளம் உதவி இயக்குநர் ஆவுடையப்பன் ஆகியோர் முந்திரி சாகுபடி ஆலோசனைகளை வழங்கினர். நல்ல லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது” என்றார் அவர்.

Keywords: விளாத்திகுளம் வறட்சி, முந்திரி சாகுபடி, அரசு மானிய உதவி, விளாத்திகுளம் வட்டம், விவசாயம், மானாவாரி சாகுபடி, பருவமழை பொய்த்தது

## கோவை: ரூ.2 க்கு ஒரு கிலோ வைக்கோல்

தமிழகத்தில் உலர் தீவன பற்றாக்குறையை சமாளிக்க கிலோவுக்கு ரூ.2 என்ற வகையில், கால்நடை வளர்ப்போருக்கு தீவனம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அதன் படி, கோவை மாவட்டத்தில் நான்கு இடங்களில் விற்பனை மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தமிழகத்தில் இரு பருவ மழையும் பெரும்பாலான மாவட்டங்களில் பொய்த்துப் போனதுடன், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சலுக்கு புல் இல்லாததாலும், சோளம், மக்காச்சோளம் ஆகியவை சரியாக விளையாததாலும் வீரிய கால்நடை தீவன உற்பத்தி பரப்பளவு குறைந்த காரணத்தாலும் கால்நடை தீவனப் பற்றாக்குறையும் நிலவுகிறது.

கால்நடை தீவனத்தின் விலையும், விவசாய இடுபொருட்கள் விலையும் உயர்ந்துள்ளதால் கால்நடைகள் வைத்துள்ள விவசாயிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இந் நிலையில் கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் தீவன உலர் வைக்கோல் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரும், கால்நடைப் பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குநரும் வெளியிட்டுள்ள அறிக்கை:

கால்நடை பராமரிப்புத் துறையின் ஆய்வு அறிக்கையின் படி, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி தமிழக அரசு கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க ரூ.12 கோடியே 50 லட்சத்தை முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு கிலோ வைக்கோல் ரூ. 2 என்ற விலையில், ஒரு மாட்டிற்கு, நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம், அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவைக்கு ஏற்ப இந்த தீவனம் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை தொடர்ச்சியாக உலர் வைக்கோல் தீவனத்தை இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் இத் திட்டத்தை செயல்படுத்த ரூ.40 லட்சம் ஒதுக்கீடு செய்து, சூலூர், சுல்தான்பேட்டை, மதுக்கரை, கிணத்துக்கடவு உள்ளிட்ட பகுதிகளில் அரசு கால்நடை மருத்துவமனைகளில் கிடங்கு அமைத்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விலைப்புள்ளிகளுக்கு வரவேற்பு**


வைக்கோல் வாங்கி, 3 கிலோ கொண்ட கட்டுகளாகக் கட்டி, வண்டி மூலம் குறிப்பிட்ட விற்பனைக் கிடங்குகளில் அடுக்கி போர் அமைத்துக் கொடுப்பதுடன், வாரம் சுமார் 15 டன் வீதம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு வழங்க விருப்பமுடைய விவசாயிகள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு விலைப்புள்ளி கொடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனை கால்நடை வளர்ப்போர் தங்களுடைய குடும்ப அட்டை நகல், தங்களது புகைப்படம் மற்றும் கால்நடையின் விபரங்களை அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்தவர்களுக்கு விரைவில் கால்நடை தீவனம் வழங்கும் அட்டை அளிக்கப்படும். இந்த அட்டை இருந்தால் மட்டுமே இத்திட்டத்தை பயன்படுத்த முடியும். இந்த திட்டத்திற்கு வழங்கப்படும்

வைக்கோல், ஈரமின்றி உலர்ந்த நிலையில் இருக்க வேண்டும். தரம் இல்லாத வைக்கோல் கொள்முதல் செய்யப்படமாட்டாது. மேலும், வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள் 10 நாட்களுக்குள் விநியோகத்தை துவங்க வேண்டும்.

விருப்பமுடைய விவசாயிகள் ஜன.23 ம் தேதிக்குள் விலைப்புள்ளியை, மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பன்முக மருத்துவமனை வளாகம், யூனியன் ஸ்கூல் ரோடு, டவுன்ஹால், கோவை -1 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் குறைந்த போட்டி விலைப்புள்ளி கோரியவர்களுக்கு ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு தானிய விளைச்சல் அதிகரிக்கும்: பவார் உறுதி



நடப்பாண்டில் உணவு தானிய விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார். 2011-12-ம் அறுவடை காலத்தில் உணவு தானிய உற்பத்தி 259.29 கோடி டன்களாக இருந்தது. இப்போது அதைவிட கூடுதலாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பிப்ரவரி மாத முற்பாதியில் அரசுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விளைச்சல் கூடுதலாக இருக்கும் என்று இந்திய வேளாண் ஆய்வு மையத்தின் 85-

வது ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் பவார் தெரிவித்தார். சம்பா பட்டத்தில் கூடுதல் பரப்பில் உணவு தானியங்கள் விதைக்கப்பட்டதாக அவர் கூறினார். இது மிகுந்த நம்பிக்கையை அளிப்பதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜூலை முதல் ஜூன் வரையிலான காலம் உணவு தானியங்க ளின் விளைச்சல் காலமாகக் கொள்ளப்படுகிறது. 2011-12-ம் ஆண்டில் மிக அதிகபட்சமாக 259.29 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியானது. அடுத்த ஆண்டு 255.36 கோடி டன்னாகக் குறைந்தது. இதற்கு நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வறட்சியே முக்கிய காரணமாகும். இந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் பருவ மழை சீராக பெய்திருப்பதைத் தொடர்ந்து குறுவை மற்றும் சம்பா விதைப்பு பரப்பு அதிகரித்துள்ளது. இதனால் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டினார். நாட்டின் பொருளாதாரத்தில் தேக்க நிலை நிலவியபோதிலும் வேளாண்துறை நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி இலக்கை நிச்சயம் எட்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார். 2013-14-ம் ஆண்டில் ஜூலை முதல் செப்டம்பர் வரையான காலத்தில் விவசாயம் மற்றும் அது சார்ந்த உப தொழில்கள் 4.6 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்களை தொடர்ந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருப்பதாகவும், இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த ஆண்டு 19 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படும் என்று அவர் கூறினார். ஆண்டு தோறும் இந்தியா 35 லட்சம் டன் பருப்பு மற்றும் ஒரு கோடி டன் சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் (ஐசிஏஆர்) கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் அனைத்தும் விவாசாயிகள் ஏற்கும் வகையில் அவர்களுக்கு லாபகரமானதாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

மிகக்குறைந்த மூலதனத்தில் அதிக விளைச்சலைத் தரும் விதைகளை உருவாக்கும் பணியில் வேளாண் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய விதைகள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவையாகவும், விளைச் சலை அதிகம் தரக்கூடிய தரமான வித்துகளாக உள்ளன என்று குறிப்பிட்டார். உணவு தானியங்கள் தவிர, பழங்கள், காய்கறிகள், பால் மற்றும் மீன் உற்பத்தி கடந்த ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். வேளாண் சார்ந்த பொருள்களின் உற்பத்தி 11 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இவற்றின் மதிப்பு ரூ. 2,01,000 கோடி என்றும் குறிப்பிட்டார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் 104 புதிய உயர் வீரிய தோட்டக் கலை விதைகளை உருவாக்கியுள்ளது. இந்த மையம் 11,835 டன் விதைகளை உருவாக்கியுள்ளாக அவர் குறிப்பிட்டார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாறுபட்ட தட்ப வெப்ப நிலை நிலவுவதாகக் குறிப்பிட்ட அவர், அனைத்து தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ற விதைகளை உருவாக்கும் பணியில் ஐசிஏஆர் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.